பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2051 | தை 22 | வியாழக்கிழமை 06.02.2020 | கதிர் 92

**இனி இது ரகசியம் அல்ல!**

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையில் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றீடாக – அமைக்கப்படும் மாற்று அணி, 'சாம்பார்க் கூட்டணியில்' இருந்து இப்போது கொள்கை ரீதியாகச் சரியான கூட்டணியாக பக்கம் 02

# பிரபாகரன் போல சம்பந்தன் இப்போது போரிட முடியாது!

## எச்சரிக்கை விடுக்கின்றது சு.க.



கொழும்பு, பெப்.06

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மேற்கொண்டமை போன்று யுத்தம் செய்யக் கூடிய நிலைமை நாட்டில் தற்போது இல்லை என்பதை இரா.சம்பந்தன் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். பக்கம் 03

## படையினர் ஐந்து பேருக்கு கோட்டா பொதுமன்னிப்பு

கொழும்பு, பெப். 06

நாட்டின் 72ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியால் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த ஐவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அரசமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 72ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறைக் பக்கம் 03

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ராஜபக்ஷாக்கள் மட்டுமல்லர் வீரவன்ஸவும் பொறுப்புக் கூறவேண்டும்

### நாடாளுமன்றில் சரவணபவன் வலியுறுத்து

கொழும்பு,பெப்.06

காணாமல் ஆக்கப்பட்டோரை மண்ணுக்குள்தான் தேடவேண்டும் எனத் திமிர்த்தனமாகச் சொன்ன விமல் வீரவன்ஸவுக்கு, அப்படிக் காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கு புதைக்கப்பட்டனர் என்பதையும், யாரால் புதைக்கப்பட்டனர் என்பதும் நன்கு தெரிந்திருக்கும். எனவே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ராஜபக்ஷக்கள் மட்டுமல்ல,விமல் வீரவன்ஸவும் பொறுப்புக்கூற வேண்டும்.

– இவ்வாறு சபையில் நேற்று புதன்கிழமை தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம் 02



## கடும் பாதுகாப்புக்கு மத்தியில் கனடாவில் பறந்த சிங்கக்கொடி



மொன்றியல், பெப். 06

கனடாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புலம்பெயர் தமிழர்களினால் கண்டனப் பேரணி முன்னெ பக்கம் 03

## சீனாவில் இருந்து நாடு திரும்பிய மாணவிக்கு கொரோனா அறிகுறி



கொழும்பு, பெப். 06

சீனாவில் இருந்து திரும்பிய மாணவி ஒருவர், கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகளுடன் பக்கம் 03

## 16 பேர் கொண்ட கோப் குழு அறிவித்தார் சபாநாயகர் கரு

கொழும்பு, பெப். 06

16 பேர் கொண்ட கோப் குழுவில் உள்ளடங்கும் அங்கத்தவர்களின் பெயர், விவரங்களைச் சபாநாயகர் கரு ஜயசூரிய வெளியிட்டுள்ளார்.

நாடாளு பக்கம்03

## தவறான நிதி முகாமையால் பொருளாதாரம் செயலிழப்பு

### மைத்திரி அரசைச் சாடுகிறார் கோட்டா

கொழும்பு, பெப். 06

2019 நவம்பர் 20ஆம் திகதி வரை நாட்டை ஆட்சி செய்த அரசின் தூரநோக்கற்றதும் வினைத்திறனற்றதுமான நிதி முகாமைத்துவத்தின் காரணமாக முழுப் பொருளாதாரமும் செயலிழந்திருப்பதாக பக்கம் 03

## 36 கிலோ கேரளக் கஞ்சாவுடன் இளவாலையில் இருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப்.06

இளவாலையில் 36 கிலோ கேரளக் கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் அரச பக்கம் 03

## கிராம அலுவலரின் சான்றிதழ்களுக்கு பிரதேச செயலர் ஒப்பம் தேவையில்லை

### பெப்ரவரி 10 முதல் புதிய நடைமுறை

கொழும்பு,பெப்.06

கிராம சேவையாளரினால் வழங்கப்படும் சான்றிதழ்களுக்கு பிரதேச செயலரின் ஒப்பம் பெறும் நடைமுறை இரத்துச் செய்யப்படுவதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை வரும் பெப்ரவரி 10ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. பக்கம் 03

## வீரவஸவைக் கைது செய்யுமாறு கோருகின்றார் செல்வம் எம்.பி.!

### தமிழர்கள் காணாமற்போனமைக்கு அவரே சாட்சியம் எனவும் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 06

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் வகை தொகையின்றிக் காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதற்கு விமல் வீரவன்ஸவே சாட்சியென பக்கம் 02

## வவுனியா விபத்தில் தாய் மரணம்! மகன் உட்பட இருவர் படுகாயம்!!



வவுனியா,பெப்.06

வவுனியா – கண்டி வீதியில் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் பலியானார். பக்கம்03

காலைக்கதிர் Kalaikathir



## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடித்தரும்படி கோரி நடத்தும் போராட்டம் ஆயிரம் நாள்களைத் தாண்டி மேலும் மாதங்களால் விரிவடைந்து செல்லும் இக்காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் என எவரும் இல்லை எனவும், அப்படி யாராவது காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் அவர்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டவர்களாக இருக்கக்கூடும் எனவும், அவர்கள் இறந்திருக்கலாம் எனவும் ஜனாதிபதியால் கருத்து வெளியிடப்பட்டிருந்தது.

அதையடுத்து சில நாள்களில் அமைச்சர் விமல் வீரவன்ஸ அவர்கள் காணாமல்போனோர் என எவரும் இல்லை எனவும், காணாமல்போனோர் தொடர்பாகப் பொறுப்புக்கூற வேண்டிய தேவை ராஜபக்ஷாக்களுக்கு இல்லை எனவும், தேவையானால் காணாமல்போனோரை மண்ணுக்குள் போய் தேடும்படியும் திமிர்த்தனமான முறையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

காணாமல்போனோர் இறந்துவிட்டார்கள் எனவும், மண்ணுக்குள்தான் அவர்களைத் தேட வேண்டும் எனவும் திட்டவட்டமாக விமலா வீரவன்ஸ கூறும் நிலையில் காணாமல்போனவர்கள் கொல்லப்பட்டு மண்ணுக்குள் புதைக்கப்பட்டுவிட்டனர் என்ற கருத்து வெளிப்படுத்தப்படுகின்றது.

எனவே, காணாமல்போனவர்களைக் கொலைசெய்து புதைத்தவர்கள் யார் என்பது நிச்சயமாக விமல் வீரவன்ஸவுக்குத் தெரிந்திருக்க வேண்டும் அல்லது கொன்று புதைத்தவர்களில் அவரும் ஒருவராக இருக்க வேண்டும். எனவே, காணாமல்போனோர் தொடர்பாகப் பதில் சொல்ல வேண்டியவர்கள் ராஜபக்ஷாக்கள் மட்டுமல்லர், விமல் வீரவன்சவும் கூடத்தான் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது காணாமல்போனோர் தொடர்பாகக் கருத்துவெளியிடும்போது, காணாமல்போனோருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்கு உண்டு எனவும், அது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபையும் உலக நாடுகளும் எதிர்பார்க்கின்றன எனத் தெரிவித்திருந்தார். அவர் அண்மையில் காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தும் அலுவலக அதிகாரிகளுடன சந்திப்பை நடத்திய பின்பே இந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார்.

கடந்த வாரம் ஜனாதிபதியாலும் அண்மையில் அமைச்சர் விமல் வீரவன்ஸவாலும் வெளியிடப்பட்ட கருத்துகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதியால் வழங்கப்பட்ட பதிலடியே இது எனக் கருத வேண்டியுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதியின் கருத்துக்கு சர்வதேச மட்டத்தில் வலிமையான மறைமுக கண்டனம் முன்வைக்கப்பட்டபோதிலும் அமைச்சர் வீரவன்ஸ காணாமல்போனோரை மண்ணுக்குள் தேடும்படி கூறிய விடயம் முழு சர்வதேசத்தையும் உதாசீனம் செய்வதும் மனிதகுல மனச்சாட்சியைக் குழிதோண்டி புதைப்பதுமான ஈனமான செயல் என்றே நாம் கருதுகின்றோம்.

இவை வெறும் கிணற்றுத்தவளையின் கூச்சலாக இருந்த போதிலும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் இதயங்களைக் கீறிக்கிழிக்கும் கொடூரமான செயல் என்றே அடித்துக் கூறுகின்றோம். அமைச்சர் விமல் வீரவன்ஸஎந்த நாட்டின் தீவிர பற்றாளர் எனக் கூறுகின்றாரோ அந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்கு விரோதமாகச் செயற்படும் போலித் தேசியவாதி என்பதை பலமுறை நிரூபித்துள்ளார்.

அண்மையில் மன்னாரில் ஒரு நிறுவனத்தின் பெயர்ப்பலகையில் தமிழுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருந்தமைக்காக அதைத் திரை நீக்கம் செய்ய மறுத்து பின்பு சிங்களத்தில் முதலிடம் கொடுத்து எழுதப்பட்ட பெயர்ப் பலகையை அந்த இடத்தில் நிறுவி அதைத் திறந்து வைத்தார். இலங்கை அரசமைப்பின்படி இலங்கையில் சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகள் என்பதும் வடக்கு, கிழக்கில் தமிழ் நிர்வாகமொழி என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் ஆகும். எனவே, வடக்கில் ஒரு நிறுவனத்தின் பெயர்ப்பலகையில் தமிழுக்கு முதலிடம் கொடுத்தமைக்காக பெயர்ப் பலகையை நீக்குவது அப்பட்டமாக அரசமைப்பை அவமதிக்கும் செயலாகும்.

விமல்வீரவன்ஸ ஏற்கனவே போலியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் கைவிலங்கிடப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமையை மறந்துவிட முடியாது.

இந்தப் போலித்தேசியவாதி இலங்கையின் சட்ட திட்டங்களைப் பகிரங்கமாகவே இரு முறை மீறியுள்ளார்.

இவ்வாறு தனது தாய்நாட்டின் சட்ட திட்டங்களை மதிக்காத இவர் தமிழ் மக்களுக்கு விரோதமான இனவெறி நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் தன்னை சிங்கள மக்களின் வீரநாயகனாகக் காட்ட முயன்று வருகின்றார்.

ஆனால், காணாமல்போனோர் விவகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலின் தீர்மானத்திற்கு உட்பட்டது என்பதும், அது தொடர்பான சர்வதேச தீர்மானத்துக்கு இலங்கை அரசு அனுசரணை வழங்கியுள்ளது என்பதும் முக்கியமான விடயங்களாகும். அதை மறுதலிப்பதென்பது சர்வதேசத்துக்குச் சவால்விடும் ஒரு முட்டாள்தனமான நடவடிக்கையாகும். அதிகாரபீடங்களுக்கு அடிவருடுவதன் மூலம் உள்ளூர் சட்டதிட்டங்களை மீறிவிட்டுதப்பிவிடலாம். ஆனால், சர்வதேச மட்டத்தில் என்றோ ஒரு நாள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

காணாமல்போன தனது பிள்ளைகளுக்காக ஏங்கும் தாயின் வேதனையை – காணாமல்போன தனது மகனுக்காகத் துடிக்கும் தந்தையின் ஏக்கத்தை – காணாமல்போன தனது கணவனுக்காக வாழ்வையே இழந்து தவிக்கும் மனைவியின் துயரத்தை –

உணர முடியாதவர்கள் அரசியல் அதிகாரத்தில் வீற்றிருக்கும் வரை நீதியைத் தேடுவது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. ஆனால், இவர்களினதும், இவர்களை வழிநடத்தும் மத வெறியர்களினதும், இவர்களின் அடிவருடும் இனவெறியர்களினதும் வீரநாயக வேடம் அம்பலப்படும்போது இவர்கள் சிங்கள மக்களாலேயே விரட்டியடிக்கப்படுவார்கள்.

'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்' எனத் தமிழில் ஒரு பழமொழி உண்டு. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வடிக்கும் கண்ணீர் ஒரு நாள் வாளாக மாறும்போது இவர்கள் அனைவரும் பதில் சொல்லியே ஆக வேண்டும்– என்றார். (ஐ)

## வீரவஸவைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவரை உடன் கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

அண்மையில் காணாமல் போனவர்களை மண்ணுக்குள் தோண்டிப் பார்க்குமாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்த கருத்துத் தொடர்பாகத் தாம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

தமிழர்களின் ஆறாத வடுவாக உள்ள காணாமால் ஆக்கப்பட்டோர் விடயத்திற்குத் தீர்வு காணாமல், தொடர்ந்துவரும் அரசுகள் ஏமாற்றி வருகின்றன.

இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வீதியோரங்களில் இன்றும் வலிகளைச் சுமந்து கண்ணீருடன் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். தமது பிள்ளைகள், என்றோ ஒரு நாள் தம்மிடம் வந்து சேர்வார்களா என்ற ஏக்கத்துடனேயே அந்தத் தேடலில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான உறவுகளைப் புலனாய்வு விசாரணைகள் என்றும் சந்தேகப் பார்வையுடனும் பல்வேறு துன்பங்களைக் கொடுத்துவரும் அரசு தற்போது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் காணாமல் போனோரை மண்ணுக்குள் தோண்டிப் பார்க்குமாறு தெரிவித்துள்ளது.

அரசின் பொறுப்பு வாய்ந்த அமைச்சரான விமல் வீரவன்ஸவின் இக்கருத்தானது அரசின் கருத்தாகவே பார்க்க முடிகின்றது. மஹிந்த ஆட்சிக் காலத்தில் போர் முடிவுக்கு வந்தபோது வட்டுவாகல் பாலத்திலும் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியிலும் நலன்புரி முகாம்களிலும் வைத்தியசாலைகளிலும் வைத்து காணாமல் ஆக்கப்பட்டோரையே இந்த உறவுகள் தேடி அலையும் போது இவ்வாறான கருத்தை விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளமை அரசின் உண்மை முகத்தைக் காட்டியுள்ளது.

எனவே மஹிந்த ஆட்சிக் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதனைத் தனது வாக்கு மூலமாக விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளமையினால் அவரை உடன் கைது செய்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன் இவ்விடயம் தொடர்பாக சர்வதேசமும் கவனஞ்செலுத்தவேண்டியதுடன் அடுத்து வரும் ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸில் மாநாட்டில் விமல் வீரவன்ஸவின் கருத்தினை அவதானத்திற்குக் கொண்டுசெல்ல நாம் நடவடிக்கை எடுப்போம்–என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றப்பட்டு விட்டது போலும்.

ரெலொவில் இருந்து பிரிந்து தனி அணியாகத் 'தமிழ்த் தேசியக் கட்சி' என்ற பெயரில் அமைப்பை ஆரம்பித்த மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தாவின் வாசகத்தில் கூறுவதாயின் இப்படித்தான் சொல்லவேண்டும்.

*"தமிழத் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றீடாக உருவாக்கப்படும் மாற்றுத்தலைமை கொள்கை ரீதியானதாக இருக்க வேண்டுமே தவிர, வெறுமனே பதவி ஆசைக்காகவும் நாற்காலிக்காவும் உருவாக்கப்படக் கூடாது. அது சாம்பார்க் கூட்டணியாக இருக்கக் கூடாது. மக்களுக்குச் சேவையாற்றக் கூடிய பலமான கூட்டணியாக இருக்க வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம். எனவே நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாம் தனித்துப் போட்டியிடுவது என்று தீர்மானித்துள்ளோம்"*– என ஆறு நாள்களுக்கு முன்னர் பகிரங்கமாக அறிவித்திருந்தார் சிறிகாந்தா.

அவரின் அந்தக் கருத்தில் இரண்டு விடயங்கள் பொதிந்திருந்தன. ஒன்று – விக்கி தலைமையில் உருவாக்கப்படும் மாற்றுக் கூட்டணி இப்போது வெறும் சாம்பார்க் கூட்டணியாகத்தான் உள்ளது. மற்றது – அந்தக் கூட்டணியில் இப்போது சிறிகாந்தா அணி இல்லை. அது தனித்துப் பொதுத்தேர்தலில் களமிறங்கப்போகின்றது.

இது, ஆறு நாள்களுக்கு முந்திய நிலைமை. இப்போது களச்சூழல் தலைகீழாகி விட்டது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

முரண்பட்டு நின்ற தரப்புகளை சமாளித்து ஒரு நிலைப்படுத்துவதில் இடைநிலையில் செயற்பட்ட பிரமுகர்கள் கணிசமான வெற்றி கண்டிருக்கின்றனர்.

விக்கியின் கட்சி, சுரேஷின் ஈ.பி.ஆர்.எல்.எவ்., சிவாஜி – சிறிகாந்தா தரப்பின் தமிழ்த் தேசிய கட்சி, அனந்தியின் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் எல்லாம் ஓரணியில் வர இணங்கி விட்டன என்று தகவல்.

சிறிகாந்தாவின் தமிழில் கூறுவதானால் 'சாம்பார் கூட்டணி', இப்போது சரி செய்யப்பட்டு விட்டது. கொள்கை ரீதியாக இணக்கம் காணப்பட்டுவிட்டது.

நாளை மறுதினம் தைப்பூசம். அன்று அல்லது அடுத்து வரும் தினங்களில் இக் கட்சிகள் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகும் என்று தெரிகின்றது.

அத்தோடு மாற்று அணி கூட்டாகப் பிரசாரக் களத்தில் இறங்கும் என எதிர்பார்க்கலாம்.

★ ★ ★

ஐ.தே.கட்சியின் தலைமைத்துவச் சிக்கல் 'சணம் பித்தம்,சணம் வாதம்' – என்ற மாதிரி என சில தினங்களுக்கு முன்னர் இப்பந்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

உள்கட்சி இழுபறி தீர்க்கப்பட்ட மாதிரித் தோற்றினாலும், விடயம் நீறு பூத்த நெருப்புத்தான். எந்நேரமும் அது மூண்டு எரியலாம் என்றும் கோடி காட்டியிருந்தேன்.

இரண்டு கருத்தும் உண்மை என்பது மீண்டும் உறுதியாகியிருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் கூட்டம் நேற்று நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ தலைமை வகித்தார். பிரதான மேசையில் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க அமர்ந்திருந்தார். தமது தலைமையில் அமையவிருக்கும் – ஐ.தே.கட்சியையும் உள்ளடக்கிய–புதிய அரசியல் கூட்டணியின் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார என்று திடீரென சஜித் பிரேமதாஸ அறிவித்தார்.

ரஞ்சித் மத்துமபண்டார அப்பதவிக்கு நியமிக்கப்படக் கூடாது என்பது ரணில் குழுவின் நிலைப்பாடு என்பது தெரிந்ததுதான்.

நேற்று மத்தும பண்டாரவின் பெயரை பிரதான மேசையில் ரணில் விக்கிரமசிங்கவையும் வைத்துக் கொண்டு சஜித் அறிவித்தபோது ரணில் தரப்பு எம்.பிக்கள் கூட அதற்கு எதிர்ப்போ – ஏன் முணுமுணுப்போ – காட்டவில்லை. ரணில் தரப்பின் ரவி கருணநாயக்கா, நவீன் திஸநாயக்கா, அகில விராஜ் காரியவசம் எல்லோரும் கூட்டத்தில் இருந்தனர். ஆனால் யாரும் அந்த அறிவிப்பை எதிர்க்காதமையால் ரணில் பெரிதும் 'அப்–செட்' ஆகிவிட்டார்.

எது, எப்படி என்றாலும், கட்சியின் செயற்குழுதான் இந்த செயலாளர் நியமனத்தை அங்கீகரிக்க வேண்டும். அங்கு பார்த்துக் கொள்ளலாம் என்பது ரணிலின் நிலைப்பாடு.

கட்சியின் தற்போதைய செயலாளரும் 'தமது ஆளுமான' அகில விராஜ் காரியவசமே புதிய அரசியல் கூட்டணியின் செயலாளராக வேண்டும் என ரணில் விரும்புகின்றார்.

நேற்றைய கூட்டத்தில் மத்துபண்டாரவின் பெயரை சஜித் அறிவித்தபோது தமது தரப்பில் அதனை யாரும் எதிர்த்துக் குரல் எழுப்பாதமையால் 'அப்–செட்' ஆன ரணில் இன்று நடைபெறவிருந்த கட்சியின் செயற்குழுக் கூட்டத்தைத் திங்கட்கிழமைக்குத் தள்ளிப்போட்டுவிட்டார். –தமது தரப்பை வலுவாகத் தயார்ப்படுத்துவதற்குத் தேவையான கால அவகாசத்தைப் பெறுவதற்காக.

போதாக் குறைக்கு, கட்சியின் செயற்குழுவுக்கு அஜித் பெரேரா, சரத் பொன்சேகா, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், ரோஸி சேனநாயக்கா ஆகியோரை இன்னும் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கவில்லை. அவர்களைக் கட்சியின் செயற்குழுவுக்குள் உள்வாங்குவதற்கு சஜித் அணி, கட்சித் தலைவருக்குக் காலக்கெடு கொடுத்திருக்கின்றது. அதற்குரிய தீர்மானத்தைத் தாம் எடுப்பதற்குக் கால அவகாசம் பெறுவதும் இந்தச் செயற்குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டமைக்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்திற்கு சஜித் தரப்புப் போகவில்லை. ஆனால் அடுத்து – பெரும்பாலும் வரும் திங்கட்கிழமை – நடைபெறும் செயற்குழுக் கூட்டத்துக்கு சஜித் தரப்பு செல்லும் என்று தெரிகின்றது.

அங்கு, சஜித் பிரேமதாஸ தாம் விரும்பியபடி தமது புதிய அரசியல் கூட்டமைப்பை உருவாக்குவதற்கு – தமக்கு விரும்பிய செயலாளரை நியமிப்பது உட்பட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு – ரணிலின் அணி தமக்குள்ள பெரும்பான்மையைப் பயன்படுத்தி முட்டுக்கட்டை போடுமானால், உடனடியாக சஜித் அணி கூட்டத்திலிருந்து வெளியேறும். தன்னுடைய பாட்டில் புதிய கட்சி, புதிய கூட்டணி என்ற பாதையை சஜித் பிரேமதாஸ ஆரம்பிப்பார். – இப்படி அவரின் தரப்புப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

எது, எப்படி என்றாலும் ஐ.தே.கவின் அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவு ஒன்று எட்டப்படும் என எதிர்பார்க்கலாம். பெரும்பாலும் அடுத்த திங்கள் மாலை நிலைமை தெளிவாகும் என நம்பலாம்.

– மின்னல் –

## சீனாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சீனாவின் யுன்ஹாய் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் இந்த மாணவி, சில தினங்களுக்கு முன்னர் இலங்கையை வந்தடைந்துள்ளார்.

மொனராகலையைச் சேர்ந்த இவர், பதுளை வைத்தியசாலையின் விசேட சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதிகளாகவிருந்த மேலும் ஐந்து பேரை விடுவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் ஐவரும் பாதுகாப்புத் துறையை சேர்ந்தவர்கள் என்பதுடன், சிறிய குற்றங்களுக்காகச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டவர்களாவர்.

இம்முறை சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்க 517 ஆகும் – என்றுள்ளது.(ஐ)

## 36 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புலனாய்வுச் சேவை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பேரில் இளவாலை பொலிஸ் நிலைய அதிகாரிகளால் இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

இதன்போது இளவாலையில் வசிக்கும் இருவர் 36 கிலோ கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## கடும் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுக்கப்பட்டிருந்தது. இதனால், அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு க்கு மத்தியில் இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒன்ராறியோ நாடாளுமன்றத்துக்கு முன்னால் நேற்று முன் தினம் கண்டனப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

## கிராம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிராம சேவையாளரால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ், நற்சான்றிதழ் உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்கள், கடிதங்களுக்கு அந்தப் பிரிவுக்குரிய பிரதேச செயலரிடம் ஒப்பம் பெறும் நடைமுறை தற்போது உள்ளது.

இந்த நடைமுறை பொதுமக்களின் நலன்கருதி இரத்துச் செய்யப்படுவதாகப் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (ஐ)

## பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு சமாதானமாக முன்னோக்கிச் செல்ல முயற்சிக்கும்போது அதில் தமிழ் மக்களை ஒன்றிணைப்பதே அரசியல் தலைவர்களாக அவர்கள் செய்யவேண்டியது. அந்த வெற்றியைத் தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதே அவர்கள் செய்யவேண்டியது. இந்த நாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தியைத் தமிழ் மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு எதிர்க்கட்சியில் இருந்தாலும் ஜனாதிபதி மற்றும் நாட்டுடன் தொடர்புகளைப் பேணி விமர்சனங்கள் இருந்தாலும் தேவையான விடயங்களை மக்களிடம் கொண்டு சென்று சேர்க்கவேண்டும்.

சுதந்திர தினத்தைப் புறக்கணிப்பது அவர்களின் உரிமை. எனினும் மொழி தொடர்பான பிரச்சினையை மீண்டும் ஏற்படுத்தவேண்டாம் என்பதையே நாம் கூறுகின்றோம். ஏனெனில் அது இந்த நாட்டுக்குப் பொருத்தமற்ற ஒன்று. நல்லிணக்கம், சமாதானம், சகவாழ்வு மற்றும் நாட்டின் முன்னோக்கிய பயணத்தை அது பாதிக்கும். கோட்டாபய ராஜபக்ஷ முன்னுதாரணமிக்க செயற்பாடுகளை மேற் கொள்ளும்போது நாடாக மேலெழுவதற்கு இரா.சம்பந்தன் தரப்பிலும் மாற்றங்கள் ஏற்படவேண்டியது அவசியம் .

மொழியைத் தொடர்பாடலுக்கே பயன்படுத்தவேண்டும். தென்னிலங்கையில் தமிழ் கற்பிக்கப்படுவதைப் போன்று வடக்கிலுள்ள பாடசாலைகளில் சிங்கள மொழி கற்பிக்கப்படுகின்றதா?

தேசிய கீதம் தமிழில் இசைக்கப்படவில்லை என்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சுதந்திர தின நிகழ்வைப் புறக்கணித்தார் என அநேகமான ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. உலகில் அநேகமான நாடுகளில் தேசிய கீதம் ஒரு மொழியில் மாத்திரமே உள்ளது. இரண்டு மூன்று நாடுகளில் வேறுபாடுகள் உள்ளன.

முன்னுதாரணமாக கூறப்படும் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் தேசிய கீதம் ஒரு மொழியிலேயே உள்ளது. தேசிய கீதம் பல மொழிகளில் உலகிலுள்ள பல நாடுகளில் இல்லை. மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளது. தற்போதுள்ள அரசு, கடந்த கால அரசு, அதற்கு முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசு என இந்த அனைத்து அரசுகளும் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கி, செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தன.

அரச சேவையில் பணியாற்றும் தமிழர்களுக்கு விசேட வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. பாடசாலைகளில் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. தமிழ் மொழியைப் பற்றி பேசுகின்ற இரா.சம்பந்தனிடம் நாங்கள் ஒன்றைக் கேட்க விரும்புகின்றோம். வடக்கில் எந்தப் பாடசாலைகளில் சிங்கள மொழி கற்பிக்கப்படுகின்றது. எனினும் தெற்கிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின் றது.

மொழி தொடர்பில் இரா.சம்பந்தனுக்கு பிரச்சினை இருக்குமாயின் அவர்கள் சார்பிலும் ஒத்துழைப்பு அவசியம். மொழி எனக்குத் தேவைப்படுவது கோத்திரத்தை உருவாக்க அல்ல. மொழி இருப்பது சிறந்த தொடர்பாடலுக்கே. ஆனால் கோத்திரமாகவே இரா.சம்பந்தன் மொழியைப் பயன்படுத்துகின்றார். எனினும் நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்தும் ஒன்றாகவே நாம் மொழியைப் பார்க்கின்றோம்.

கோத்திர மொழி என்பதும் தொடர்பாடலுக்கு பயன்படுத்தப்படும் மொழி என்பதும் வேறுபட்டவை. ஆகவே இலங்கையராகச் சிந்திக்கும்போது தேசிய கீதம் ஒரு மொழியில் இருப்பது பிரச்சினையில்லை. தேசிய ரீதியான தனித்துவங்கள் இருக்கின்றன. தேசிய கீதம், தேசியக் கொடி போன்ற தேசிய சின்னங்கள் இருக்கின்றன. அவற்றில் கை வைக்க முடியாது – என்றார். (ஐ)

## தவறான நிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடைக்கால அரசு தெரிவித்துள்ளது.

இது விவசாயம், இலவச சுகாதார சேவை, நிர்மாணக் கைத்தொழில், உணவுப் பொருள்கள் விநியோகம், தேயிலைக் கைத்தொழில், அரிசி உற்பத்தி போன்ற முக்கிய துறைகளின் வீழ்ச்சிக்கு காரணமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த சிறப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

பொருளாதாரம் செயலிழந்திருப்பதற்கு அடிப்படை காரணம் சேவைகளுக்காக மேற்கொள்ளப்படவேண்டிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்தமையாகும். கடந்த அரசு 2019 ஆம் ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்டிருந்த வரவு– செலவு மதிப்பீடு களில் உள்ளடங்கியிருந்த சகல நிதி ஒதுக்கீடுகளையும் கடந்த நவம்பர் மாதம் ஆகும்போது செலவு செய்திருந்தது. இதனால் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் அந்த அரசினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பல செலவீனங்களுக்கு நிதி வழங்க திறைசேரியினால் முடியவில்லை.

2019ஆம் ஆண்டுக்கு அனும திக்கப்பட்டிருந்த அரசின் வருமானம் 2 ஆயிரத்து 400 பில்லியன் ரூபாயாகும். அதில் டிசெம்பர் மாதம் ஆகும்போது கிடைக்கப் பெற்றிருந்த நிதி ஆயிரத்து 800 பில்லியன் ரூபாயைத் தாண்டவில்லை. இதனால் அரச வருமானம் ஆரம்ப மதிப்பீட்டினைவிட சுமார் 600 பில்லியன் ரூபாயால் குறைந்துள்ளது. இதனால் வருட இறுதியாகும் போது இரண்டு மாதங்களுக்கும் அதிகமான காலம் செய்யப்படவேண்டிய பெரும்பாலான கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருக்கவில்லை என அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

2019 நவம்பர் 16ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகளில் தீர்க்கப்படாமல் உள்ள செலவு ஆயிரத்து 188 மில்லியன் ரூபாயாகும். வைத்தியசாலைகளில் மருந்துகள் மற்றும் வழங்கல்களுக்காக சுகாதார அமைச்சினால் வழங்கப்பட வேண்டிய நிதியில் 25 ஆயிரத்து 696 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டிருக்கவில்லை. மூத்த குடிமக்களுக்கான வட்டி மானியங்களுக்காக நிதி அமைச்சு வங்கிகளுக்கு செலுத்த வேண்டியுள்ள தொகை 45 ஆயிரத்து 856 மில்லியன் ரூபாவாகும். உர மானியத்திற்காக உரங்களை வழங்குபவர்களுக்கு 23 ஆயிரத்து 950 மில்லியன் ரூபா வழங்கப்பட வேண்டியுள்ளது.

நெடுஞ்சாலைகள் நிர்மாணப் பணிகளுக்காக செலுத்தப்படாதுள்ள தொகை 18 ஆயிரத்து 449 மில்லியன் ரூபாயாகும். கம்பரெலிய கருத்திட்டங்கள், வட மாகாண அபிவிருத்தி, மீள்குடியேற்றம் என்பவற்றிற்காக செலுத்தப்படாமல் உள்ள நிலுவைப் பணம் 3 ஆயிரத்து 126 மில்லியன் ரூபாயாகும். நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய வேலைத்திட்டங்களுக்கு செலுத்தப்படவேண்டியுள்ள தொகை 6 ஆயிரத்து 558 மில்லியன் ரூபாவாகும். இவை செலுத்தப்படவேண்டியுள்ள நிலுவை தொகை தலைப்புகளில் ஒரு சில மட்டுமேயாகும்.

செலுத்தப்பட வேண்டிய தொகை நிலுவையாக உள்ள காரணத்தினால் பெரும் நெருக்கடி நிலமைகள் ஏற்பட்டுள்ளன. உரக் கூட்டுத்தாபனம், உர இறக்குமதி மற்றும் விநியோகத்திலிருந்து விலகிக்கொண்டுள்ளது. அரச உரக் கம்பனிகள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் நெற் செய்கைக்கான உரத்தை வழங்கிய போதும் ஏனைய பயிர்களுக்கான உர விநியோகம் சீர்குலைந்துள்ளது. மொத்த விவசாயத்துறையும் பின்னடையக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

புற்றுநோய் வைத்தியசாலை உள்பட அனைத்து வைத்தியசாலைகளுக்கும் உரிய முறையில் மருந்துப் பொருள்களை வழங்க முடியாமல் உள்ள காரணத்தினால் இலவச சுகாதார சேவையும் சீர்குலைந்துள்ளது. உள்நாட்டுக் கட்டட நிர்மாணத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. சிறிய மற்றும் நடுத்தரளவிலான சுமார் 700 நெல் ஆலைகளில் அரைவாசிக்கும் அதிகமானவை மூடப்பட்டுள்ளன. 400க்கும் அதிகமான தேயிலைத் தொழிற்சாலைகள் செயலிழந்து காணப்படுகின்றன.

அரச வங்கி முறைமையும் வினைத்திறனற்ற முகாமைத்துவத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அரசு குறிப்பிட்டுள்ளது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் பணிப்பாளர் சபை மற்றும் நிறைவேற்று அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளைக் கருத்திற்கொள்ளாமல் பிணைகள் இன்றி கடன்கள் வழங்கப்பட்டிருப்பதனால், அக்கடன்களை அறவிட முடியாத நிலை உள்ளது. அது 72 பில்லியன் ரூபா அல்லது 7200 கோடிகளாகும். அவை சிறப்பு நபர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் என தெரியவந்துள்ளது.

உரிய அனுமதியோ, தேவையான நிதி ஏற்பாடுகளோ இன்றி விதி முறைகளுக்கு புறம்பாக கடந்த அரச ஊழியர்களை ஆள் சேர்ப்பு செய்திருப்பதுவும் மற்றுமொரு பிரச்சினையாகும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை 167 ஆகும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய நட்டம் 10 ஆயிரம் மில்லியன் ரூபாவாகும்.

இவ்வாறான பொறுப்பற்ற ஆள்சேர்ப்புகள் மற்றும் செயலாற்றும் திறனின்மையை நீக்கப்படாமல் விலைச் சூத்திரத்தை நடைமுறைப்படுத்தி மக்கள் மீது சுமையை ஏற்படுத்துவது நியாயமானதல்ல என்றும் அரசு சுட்டிக்காட்டியுள்ளது. தொல்பொருள் திணைக்களத்துக்கும் கலாசார நிதியத்திற்கும் ஆயிரத்து 430 பேர் மேற்கூறியவாறு ஆள்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். கலாசார நிதியத்தின் சட்டத் திட்டங்களுக்கு ஏற்ப அதன் நிதி கலாசார மற்றும் தொல்பொருள் பராமரிப்புகளுக்கு மாத்திரமே பயன்படுத்த முடியும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசு இந்த பிரச்சினையிலிருந்து பொருளாதாரத்தை மீட்பதற்கான உறுதிப்பாட்டுடன் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. வரவு–செலவுத் திட்ட நிலுவையை 2025ஆம் ஆண்டாகும்போது 04 வீதமாகவும் தற்போது 80 வீதமாகவுள்ள அரச கடனை 70 வீதமாகவும் குறைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவது அரசின் பொறுப்பாகுமென்பதால் மிக விரைவில் அவர்களுக்கு தொழில்களை பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. உயர்கல்வி வாய்ப்புக்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. தேயிலை, கறுவா, மிளகு மற்றும் ஏனைய பெருந்தோட்ட பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்து ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளம் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படவுள்ளது. கரும்பு செய்கையை அபிவிருத்தி செய்து சீனி மற்றும் எதனோல் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மர முந்திரிகை பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு 10 அத்தியாவசிய பொருள்களை நிவாரண அடிப்படையில் பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழி மார்ச் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மூடிவிடுவதற்கு அல்லது தனியார்மயப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த ஸ்ரீலங்கன் விமான சேவை முழு அபிவிருத்திக்கும் பங்களிக்கக்கூடிய வகையிலான நிறுவனமாக மாற்றப்படவுள்ளது.

தேசிய விமான சேவையினால் மேற்கொள்ளக்கூடிய பணி கொரோனா தொற்று ஆபத்திற்கு முகங்கொடுத்துள்ள இலங்கை மாணவர்களை அழைத்து வர மேற்கொண்ட நடவடிக்கையின் மூலம் தெளிவாகியுள்ளது. 2019, 2020 பெரும்போக அறுவடை தற்போது ஆரம்பித்துள்ளது. நெல்லுக்கு கிலோ ஒன்றிற்கு 50 ரூபா குறைந்த விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளை வலுவூட்டி மொத்த விவசாய முறையையும் முன்னேற்றுவ தற்கு முறையான திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாகவும் அரசு குறிப்பிட்டுள்ளது – என்றுள்ளது. (ஐ)

## 16 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்றம் நேற்றுப் பகல் ஆரம்பமாகியது. இதன்போதே சபாநாயகர் கரு ஜயசூரிய இந்தத் தகவலை வெளியிட்டார்.

அதன்படி அமைச்சர்கள் அனுர பிரியதர்ன யாப்பா, சுசில் பிரேம ஜயந்த, மஹிந்தானந்த அளுத்கமகே, தயாசிறி ஜயசேகர, ஜயந்த சமரவீர, மொஹான் பிரியதர்ன டி சில்வா ஆகியோர் கோப் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

அவ்வாறே, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், விஜயதாச ராஜபக்ஷ, ஹர் டி சில்வா, அஜித் பி பெரேரா, சிறியானி விஜேவிக்ரம, ரஞ்சன் ராமநாயக்க, அசோக் அபேசிங்க, சுனில் ஹந்துநெத்தி, மாவை சேனாதிராசா மற்றும் டி.வி.சானக்க ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவரது மகன் உள்ளிட்ட இருவர் படுகாய மடைந்த

நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வன்னி பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்துக்கு முன்பாக பட்டா ரக வாகனத்தைச் சாரதி பின்நோக்கி செலுத்திய சமயத்தில் வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வவுனியா நகரிலிருந்து கண்டி வீதியூடாக பயணித்துக் கொண்டிருந்த சைக்கிள்கள் மீது மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் சைக்கிளில் தனது 7 வயது மகனை ஏற்றிச்சென்ற இளம் தாய்,அவரது மகன், மற்றுமொரு பெண் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் சிகிச்சை பலனின்றி தாய் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். ச. புஸ்பராணி (வயது 36) என்ற 3 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்தில் இரு சைக்கிள்களும் பட்டா ரக வாகனத்தின் சில்லினுள் அகப்பட்டு முழுமையாக சேதமடைந்துள்ளமையுடன் பட்டா ரக வாகனம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. (ஐ)

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## இறந்த காலத்தை மறந்த கோட்டா

புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஆற்றிய சுதந்திர தின உரையை சிலாகித்து, மெச்சி ஆசிரிய தலையங்கம் எழுதிய கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று அந்தப் பேச்சின் சிறப்பு என்று தனது தலையங்கத்தின் ஆரம்பத்திலேயே ஒரு விடயத்தை விசேடமாகச் சுட்டிக் காட்டியுள்ளது.

எந்த விடயத்தை மிகச் சிறப்பானது – மேன்மையானது – பாராட்டத்தக்கது – என்று அந்த நாளிதழ் ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றாரோ அதற்குள்தான் முழு அபத்தமும் – முழு அவலமும் – முழுச் சீர்கேடும் – புதைந்து கிடக்கின்றன என்பது அந்த ஆங்கில நாளிதழுக்கும் அதன் வாசகர்களுக்கும் சுட்டிக்காட்டப்பட வேண்டும். அதற்கான பதிவே இது.

*“தமக்கு முன்பிருந்த ஜனாதிபதிகள் போல் பழங்கதை பேசி, பழையவற்றைப் பற்றி பிரபலாபம் பண்ணாமல், நிகழ்காலம் பற்றியும் எதிர்காலம் பற்றியுமே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றினார்.”* என்று விதந்துரைத்திருக்கின்றது அந்த ஆசிரிய தலையங்கம்.

ஆனால், உண்மையில் ஜனாதிபதி ராஜபக்ஷ பேசாமல், மூடி மறைத்து, ஒளித்த அந்தக் கடந்த காலத்துக்குள்தான் இலங்கைத் தீவின் நிரந்தர அமைதிக்கான – நிலையான சமாதானத்துக்கான – நீதியான தீர்வுக்கான – இரகசியம் புதைந்து கிடக்கின்றது.

கடந்த கால நிகழ்வுகளின் பின்னால் புதைந்து கிடக்கும் உண்மைகள், நிஜங்கள், பேரதிர்ச்சிகளைத் தரும் யதார்த்தங்கள் அம்பலமாகுமானால் இலங்கையின் ஜனாதிபதி உட்பட பலரும் இன்று இருக்கும் – இருக்க வேண்டிய – இடங்கள் வேறாக இருக்கும்.

அதனால் பழையவற்றை மூடி மறைத்துக் கொண்டு, நடப்பவை குறித்தும், எதிர்காலம் பற்றியும் அதிகம் பேசுகின்றார் புதிய ஜனாதிபதி.

நிகழ்காலமும் எதிர்காலமும் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிப்பவை அல்ல. அவை கடந்த காலத்தின் மீதுதான் கட்டப்பட்டுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

அந்த அத்திபாரம் – கடந்த கால நிகழ்வுகளின் பதிவு அல்லது ஒழுங்கு – சீர் செய்யப்படாமல், அதில் உள்ள தவறுகள் திருத்தப்படாமல், அதன் மீது கட்டப்படும் நிகழ்காலம், எதிர்காலம் என்ற கட்டமைப்பு பலவீனமானதாகத்தான் இருக்கும். விரைவில் சிதறுண்டு போய் விடும்.

அதுவும் கடந்த காலம் என்ற அத்திபாரத்தில் இடம்பெற்றுள்ள மோசமான பின்னடைவுகள், பலவீனங்களை விரிப்பைப் போட்டு மூடி விட்டு, அதன் மீது பலமான கட்டடம் என்ற பெயரில் எழுப்பப்படும் எதுவுமே நின்று, நிலைத்து, நீடிக்க மாட்டா.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் கடந்த காலம் பற்றிய படிப்பினை – பட்டறிவு – மிக முக்கியமானது.

அதை மூடி மறைத்துக் கொண்டு, புதிய முயற்சியை ஆரம்பிப்பது என்பது காரிய சாத்தியமோ அனுகூலமோ உடையதல்ல.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய – நீதி, நியாயமான – தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமானால் அதற்கு மிக முக்கியமானவை – அடிப்படையானவை – நல்லிணக்கமும் புரிந்துணர்வுமே ஆகும்.

ஆயுத முனையில் காணப்பட்ட வெற்றியின் மூலம் வல்வந்தமாகத் திணிக்கப்படுகின்ற எதுவும் தீர்வாக இருக்கவே முடியாது. அது, அடக்குமுறையின் ஓரங்கமாக இருக்க முடியுமே தவிர, நீதியான தீர்வாக இருக்க முடியாது.

ஆக, தீர்வு வேண்டுமானால் – இந்தத் தீவில் நிரந்தர சமாதானமும், நிலையான அமைதியும் பேணப்பட வேண்டுமானால் – நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படுவதற்கான வழிவகைகள் குறித்தே சிந்திக்க வேண்டும்; முயற்சிக்க வேண்டும்.

கடந்த காலத்தை – அதன் சோகமயமான பக்கங்களை – மூடிமறைத்து விட்டு, அதன் மீது புரிந்துணர்வும், நல்லிணக்கமும் காணலாம் எனக் கனவு காண்பது, அபத்தமானது; சாத்தியமேயற்றது.

இலங்கைத் தீவை ரணகளப்படுத்திய யுத்தம் முடிவுற்று பத்தரை ஆண்டுகள் கடந்து விட்டன.

ஆனால், கடந்து போன கசப்பான காலங்களின் உண்மைகளைக் கண்டறிந்து, அதன் பாதிப்புக்களை நிவர்த்தி செய்யவும், நீதியை நிலைநாட்டவும், உண்மைகளைக் கண்டறியவும், மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும், நியாயமான நடவடிக்கைகள் எவையும் இதுவரை மேற்கொள்ளப்படவேயில்லை என்பதுதான் துன்பகரமான உண்மை.

நடந்தவற்றை – கசப்பான அனுபவங்களை – மறந்தால் மட்டுமே புதிய வாழ்வும், புதிய தீர்வும், நல்லிணக்கமும் ஏற்பட வாய்ப்புண்டு என்பது உண்மைதான். அது மறுக்கக் கூடியதல்ல.

ஆனால், நடந்த கொடூரங்களுக்கு, அடாவடித்தனங்களுக்கு, அராஜகங்களுக்கு, நீதி காணப்படாமல் – உண்மைகள் கண்டறியப்படாமல் – பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படாமல் – தவறிழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் – அவற்றையெல்லாம் அடியோடு மறந்து விட்டு, நல்லிணக்கத் தீர்வு காண்பது என்பது சாத்தியமேயற்றது.

கோட்டாபய ராஜபக்ஷவின் கடந்த காலம் கறை மிகுந்தது. சர்வதேச தர நிலைகளுக்கு அமைவான முறையில் விசாரணைகள் நடக்குமானால் அவர் பற்றிய பல திடுக்கிடும் உண்மையால் வெளியாகும். கட்டளையிடும் ஒழுங்கு அமைப்பின் (Chain Of Command) பிரகாரம் அவர் மீது சுமத்தப்படக் கூடிய குற்றங்கள் மிக மோசமானவையாக – மிகப் பாரதூரமானவையாக – மிகக் கொடூரமானவையாக – இருக்கும்.

இதுதான் கடந்த காலத்தைத் தவிர்த்து, நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் குறித்து அவர் பேசுவதன் இரகசியமாகும்.

# தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றவர்களுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கக்கூடாது!

## மாகாண சபை முன்னாள் உறுப்பினர் வலியுறுத்து



வவுனியா, பெப். 06

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்கவுள்ள தேசியப் பட்டியல் ஆசனத்தைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்கு வழங்கக்கூடாது என மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ. மயூரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் போட்டி நிறைந்த களமாக அமையவுள்ளது. இவ்வாறான போட்டிக் களத்தில் பலரும் போட்டியிட விருப்பம் கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை அதிகப்படியான ஆசனங்களை வடக்கு – கிழக்கில் கைப்பற்றும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினையையும் அவர்களது அபிலாகைகளையும் நிறைவேற்றக் கூடிய ஒரேயொரு கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது என்பதை எவரும் மறந்து விட முடியாது.

அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தைப் பிரதிபலிபார்கள் என்பது உண்மை. அதனடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பலமான ஆரோக்கியம் மிக்க வேட்பாளர்களைக் களத்தில் இறக்கும்.

அதிக ஆசனங்களைக் கைப்பற்றுவதால் கூட்டமைப்புக்கு கிடைக்கும் தேசியப் பட்டியல் ஆசனங்களைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்கு வழங்காமல் இளைஞர்களுக்கும் கல்வியியலாளர்களுக்கும் மக்களின் வேதனைகளை அறிந்த சமூக சேவகர்களுக்கும் வழங்க முன்வர வேண்டும் – என்றார். (ஐ)

# ஒன்றரை கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத் தாள்களுடன் மன்னாரில் ஒருவர் கைது!

மன்னார், பெப். 06

மன்னாரில் சுமார் ஒரு கோடி ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி, தாராபுரம் பகுதியில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்தே இந்த இளைஞன் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த இராணுவச் சோதனைச் சாவடியில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொண்டபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞனை இராணுவத்தினர் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைத்துச் சோதனைக்கு உட்படுத்தினர். இதன் போது மோட்டார் சைக்கிளின் ஆசனத்தின் கீழ்ப் பகுதியில் நாணயத் தாள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

சுமார் ஒரு கோடி ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியுள்ள அமெரிக்க டொலர் நாணயத்தாள்கள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபரிடம் மீட்கப்பட்ட நாணயத்தாள்களுடன் சந்தேகநபர் இராணுவத்தினரால் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கொரோனாவைக் கட்டுப்படுத்த கட்டுநாயக்காவுக்குள் ‘நனோ’

கொழும்பு, பெப். 06

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நனோ தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது.

சீனாவிலிருந்து பரவ ஆரம்பித்து தற்போது உலக நாடுகள் பலவற்றிலும் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது.

விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் ஹொான் சுமனசேகர இதனைத் தெரிவித்துள்ளார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விமான நிலையத்தினுள் உள்ள காற்றைச் சுத்தம் செய்வதன் மூலம் வைரஸ்களை அழிப்பதற்கான முறைமை, தற்போது பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதற்காக 24 இயந்திரங்கள் கடந்த மாதம் 28ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த இயந்திரங்கள் நனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி காற்றில் உள்ள வைரஸ்களை அழிக்கும் திறன் கொண்டவையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் தமது அன்றாடப் பணிகளின்போது, பாதுகாப்பு முகக்கவச உறைகளை அணியுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், விமான நிலையத்தைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு இந்த விதிமுறை கட்டாயமானது அல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து விமானப் பயணிகளும் விமான நிலையத்தில் வெப்பநிலைப் பரிசோதனைக்கு தம்மை உட்படுத்த வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## நாளை 07.02.2020 - வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: புனர்பூசம் சித்தம் மு.இ. 10.54 வரை
இராகுகாலம் : 11.05 – 12.35
திதி : திரியோதசி பி.ப. 05.01 வரை
சுப நேரம் : 06.35 – 08.05

## கொரோனா தொற்று;
# இலங்கையர் மூவர் வைத்தியசாலையில்

கொழும்பு, பெப். 06

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்ற சந்தேகத்தில், சீனாவிலிருந்து நாடு திரும்பிய மூன்று இலங்கையர்கள் அங்கொடை தொற்று நோய்த் தடுப்பு (ஐ.டி.எச்) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த மூவரும் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அங்கொடை வைத்தியசாலைக்கு சென்ற நிலையில் கொரோனா வைரஸ் சந்தேகத்தின் பேரில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

எனினும் அவர்களுக்கு அந்தத் தொற்று இருப்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை என அந்த வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

அத்துடன் இதுவரை இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான ஒருவரே கண்டறியப்பட்டுள்ளதாகவும் அந்தச் சீனப் பெண்ணுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு அவர் தற்போது குணமடைந்துள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

# கோட்டாவின் பேச்சும் செயலும் ஒன்றுக்கொன்று முரண்படுகிறது

## சுதந்திர தின உரை குறித்து மனோ கருத்து

கொழும்பு, பெப். 06

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பேச்சும் செயலும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றதென முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இலங்கையின் 72ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று முன் தினம் கோலாகலமாக இடம்பெற்றன. இதன்போது ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைப் போன்று சிங்களத்தில் மாத்திரமே தேசிய கீதம் பாடப்பட்டது.

இந்நிலையில், தமிழில் தேசிய கீதம் பாடப்படாமை குறித்து அமைச்சர் மனோவிடம் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுதந்திர தின உரையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனக்கு வாக்களிக்காத மக்களுக்கும் தான் ஜனாதிபதியாக செயற்படுவேன் என்றும் கூறுகிறார்.

எனினும் தேசிய தினத்தில், நாம் கொண்டு வந்த தமிழில் தேசிய கீதம் பாடும் வழமையை மாற்றித் தடை செய்திருக்கிறார்.

அதாவது, தனக்கு வாக்களித்த சிங்கள மக்களை மட்டும் மனதில்கொண்டு தடை செய்திருக்கிறார். எனவே ஜனாதிபதியின் பேச்சும் செயலும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன.

பேசும்போது, தான் எல்லா மக்களுக்கும் ஜனாதிபதி என கூறுகிறார். ஆனால் நடைமுறையில் சிங்கள


Mano Ganesan is with Krishanth Kumar Sudha and 9 others in Dehiwala.
12 hrs

"தனக்கு வாக்களிக்காத மக்களுக்கும் தான் ஜனாதிபதியாக செயற்படுவேன்" என்றும் கூறுகிறார்.

அப்புறம்,
தேசிய தினத்தில், நாம் கொண்டு வந்த தமிழில் தேசிய கீதம் பாடும் வழமையை, தனக்கு வாக்களித்த சிங்கள மக்களை மட்டும் மனதில் கொண்டு, தடையும் செய்கிறார்.

தடை செய்யுங்கள், "மிஸ்டர் பிரசிடென்ட்"! அப்புறம் ஏன் "எல்லோருக்கும் ஜனாதிபதி" என்ற "பில்ட்-அப்"..?

முரண்பாடுகளின் பெயர்தான் கோதாபய! இவர் பக்கத்தில் இருக்கும் "செந்தமிழ்" அமைச்சர்கள் இவரின் இந்த முரண்பாட்டை இவருக்கு விளக்கி கூற மாட்டார்களா?

மக்களை மட்டும் மனதில்கொண்டு, சிங்கள, பௌத்த நாடு என்ற அடிப்படையில் செயற்பட்டுள்ளார்.

எனவே ஜனாதிபதியிடம் ஒன்றைக் கூற விரும்புகிறேன், மிஸ்டர் பிரசிடென்ட்! நீங்கள் தடை செய்யுங்கள் ஆனால், ஏன் 'எல்லோருக்கும் ஜனாதிபதி' என்ற 'பில்ட் – அப்'..?

எனவே முரண்பாடுகளின் மொத்த உருவமாகவே கோட்டாபய ராஜபக்ஷ இருக்கிறார். இதைத் தமிழ் தலைமைகள் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறமாட்டார்களா என்றே தமிழ் மக்கள் எண்ணுகின்றனர். தமிழ் மக்களின் மனசாட்சியாகவே நான் இங்கு எதிரொலிக்கின்றேன் எனக் குறிப்பிட்டார். இந்த விடயம் தொடர்பாக அவர் தனது முகப்புத்தகத்திலும் பதிவிட்டுள்ளார். (ஐ)

# துப்பாக்கி ரவைகள் மீட்பு!

கொழும்பு, பெப். 06

பசறை – கனவரல்லை பெருந்தோட்டத்தை அண்மித்த அடர்ந்த காட்டுப் பகுதியில் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

எஸ்.எல்.ஆர். துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் ரவைகளே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

பசறைப்பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலொன்றையடுத்தே இவை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து எவரும் கைதுசெய்யப்படாதநிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமுன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# 2ஆயிரம் பயணிகளுடன் இலங்கை வரும் கப்பல்!

## கொரோனா சோதனை கட்டாயம்

கொழும்பு, பெப். 06

சுமார் 2 ஆயிரம் பயணிகளுடன் இலங்கை நோக்கிக் கப்பல் ஒன்று வந்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் லக்ஷ்மன் கம்லத் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று குறித்து அச்சம் உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள நிலையில் இந்தக் கப்பலில் இலங்கை வரும் அனைத்துப் பயணிகளையும் பரிசோதிப்பதற்கான ஏற்பாடுகள் முழுமை அடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விமான நிலையத்துக்கு வரும் பயணிகளைச் சோதனைக்கு உட்படுத்தும் முறையில் கப்பலில் வரும் பயணிகளையும் சோதனைக்கு உட்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கைக்கு விமான நிலையம் ஊடாக வரும் பயணிகளில், விசேட அவதானம் தேவைப்படும் பயணிகளைக் கண்காணிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் பயன்படுத்தக் கூடிய வகையிலான திறன்பேசி செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதன் ஊடாக உடனுக்குடன் விசேட அவதானம் தேவைப்படும் பயணிகளைக் கண்காணிக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ஐ)

# சஜித் கூட்டணி சின்னம், பதவிகள் தொடர்பான அறிவிப்பு விரைவில்!



கொழும்பு, பெப். 06

சஜித் தலைமையிலான புதிய கூட்டணியின் சின்னம் மற்றும் பதவிகள் குறித்து அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

புதிய கூட்டணி குறித்து ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸதலைமையிலான புதிய கூட்டணியின் நடவடிக்கைகளை மிகவிரைவில் ஆரம்பிக்க இருக்கின்றோம்.

பொதுத் தேர்தல் நெருங்கி இருப்பதால் அதற்கான வேலைத்திட்டங்களையே ஆரம்பமாக மேற்கொள்ள இருக்கின்றோம். இது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாட இருக்கின்றோம்.

அத்துடன் எமது கூட்டணியின் சின்னம் மற்றும் அதன் பதவிகள் தொடர்பாகக் கலந்துரையாடியே தீர்மானிக்க இருக்கின்றோம். என்றாலும் மிக விரைவில் சின்னம் மற்றும் பதவிகளை அறிவிப்போம்.

அத்துடன் எமது புதிய கூட்டணிக்கு ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சி தலைவர்களும் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

ஜனநாயகத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைத்து அரசியல் கட்சிகள் சிவில் அமைப்புகள் மற்றும் கூட்டணிகளுக்கும் எமது புதிய முன்னணியில் இணைந்து கொள்ள அழைப்பு விடுக்கின்றோம் – என்றார். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.06

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை–**

**யாழ் பிரதேசத்தில் –**

கொழும்புத்துறை வீதி, AV வீதி, துண்டி, நெடுங்குளம், மணியந்தோட்டம், கெலன் தோட்டம், உதயபுரம், Infentas Ice Solutions Pvt Ltd, நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன் தோப்பு, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, கைதடி, நுணாவில், Link Readymix (Pvt) Ltd பனை அபிவிருத்தி சபை, சித்த மருத்துவ பீடம், United Motors Lanka Plc, Excello Holding (Pvt) Ltd, Sanken Construction (Pvt) Ltd, வடமாகாண ஆளுநர் அலுவலகம், Metro Housing Construction (Pvt) Ltd, Narayana cement production ஆகிய இடங்களிலும் –

**வவுனியாப்பிரதேசத்தில் –**

மூன்றுமுறிப்பிலிருந்து பூ ஓயா வரை, Gowloom Garments, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், SLBC ஈரப்பெரியகுளம் யோசப்படை முகாம், மூன்றுமுறிப்பு இராணுவ முகாம், Air Point Joint Service Army Camp, BOO Xah, Recbo North, புதுக்குளம் கோவில்குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், கிடாச்சூரி, மறவன்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

ஸ்ரீ முருகன் Jaffna
SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்தைத் திரும்பப் பெறக்கோரி பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

இஸ்லாமாபாத்,06

இந்தியாவின் காஷ்மீரில் அந்த மாநிலத்துக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டதை திரும்ப பெறக்கோரி, பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆண்டுதோறும் பெப்ரவரி 5 ஆம் திகதி, காஷ்மீர் ஆதரவு தினமாக பாகிஸ்தானில் கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி, பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஒரு தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது.

அதில், "காஷ்மீர் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்ததை இந்தியா திரும்பப்பெற வேண்டும். காஷ்மீரில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை பார்வையிட சர்வதேச அமைப்புகளை அனுமதிக்க வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தனது தீர்மானங்கள் அடிப்படையில், காஷ்மீர் பிரச்சினைக்கு அமைதித் தீர்வை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்தியாவின் பாரதீய ஜனதா அரசின் போர் மிரட்டலை முறியடிப்போம். காஷ்மீர் மக்களுக்கு தார்மீக, அரசியல் ஆதரவு அளிப்போம்'' என்று கூறப்பட்டுள்ளது. இந்த தீர்மானம், ஒருமனதாக நிறைவேறியது.



## கொரோனா நோய்ச் சந்தேகநபர்கள் 2பேர் வளைகுடாவுக்குத் தப்பி ஓட்டம்?



கோழிக்கோடு,பெப்.06

சீனாவில் இருந்து வந்து, கேரளாவில் தனிமைப்படுத்தப்பட்ட 2 மாணவர்கள் வெளிநாட்டுக்கு தப்பி ஓடிய சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கேரளாவில் கொரோனா வைரஸ் நோய் தாக்கியவர்கள் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்துள்ளது. இந்த நிலையில், சீனாவின் உகான் நகரில் இருந்து கொரோனா வைரஸ் பீதியால், 2 மாணவர்கள் கடந்த 15 ஆம் திகதி கேரளா திரும்பினர். அவர்கள் உள்பட கோழிக்கோட்டில் உள்ள மாவட்ட ஆஸ்பத்திரியில் 300க்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் அந்த 2 மாணவர்களும் சொல்லிக்கொள்ளாமல், வளைகுடா நாட்டுக்கு தப்பியோடிவிட்டனர்.

இதை மாவட்ட மருத்துவ அதிகாரி டாக்டர் வி.ஜெயஸ்ரீ உறுதி செய்தார். மேலும் இது தொடர்பாக மாநிலக் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்து இருப்பதாகவும் அவர் கூறினார்.

## அபராதம் 10 கோடி ரூபாவைச் செலுத்தாதமையால் சசிகலாவுக்கு மேலும் ஓராண்டு சிறைத் தண்டனை?

பெங்களூரு,பெப்.06

10 கோடி அபராதத் தொகையைச் செலுத்தாவிட்டால், சசிகலா கூடுதலாக ஓராண்டு சிறை தண்டனை அனுபவிக்க நேரிடும் என்று சிறைத்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.



சொத்து குவிப்பு வழக்கில் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சிறையில் உள்ளனர். அவர்களுக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், தலா ரூ.10 கோடி அபராதமும் விதிக்கப்பட்டு உள்ளது.

சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோரின் தண்டனை காலம் 3 ஆண்டுகள் ஏறத்தாழ நிறைவடைந்துவிட்டது. ஆனால் 3 பேரும் இன்னும் அபராதத் தொகையைச் செலுத்தவில்லை என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து பரப்பன அக்ரஹாரா சிறைத்துறை அதிகாரிகள் கூறியவை வருமாறு:-

சொத்துக் குவிப்பு வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டு உள்ள சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு தலா ரூ.10 கோடி அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. ஆனால் 3 ஆண்டுகள் முடிந்த நிலையில் அவர்கள் இன்னும் அபராதத் தொகையைச் செலுத்தவில்லை.

தண்டனை காலம் முடியும் முன்பு அபராதத் தொகையை செலுத்தாவிட்டால் 3 பேரும் கூடுதலாக ஓராண்டு சிறையில் இருக்க வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட பெரிய வழக்குகளில் அபராதம் விதிக்கப்படுபவர்கள் தண்டனையின் கடைசி வருடத்தில்தான் அபராதத் தொகையை செலுத்துவார்கள்.

சசிகலா சிறையில் இருந்து விடுதலை ஆவதில் 2 சிக்கல்கள் உள்ளன. அபராத தொகை அவர் சம்பாதித்த பணத்தில் இருந்துதான் செலுத்த வேண்டும். அவர் சிறையில் வேலைபார்த்து சம்பளம் வாங்கி இருந்தால் அந்த பணத்தைக் கழித்து மீதிப் பணத்தை செலுத்தினால் போதும்.

அவர் செலுத்தும் அபராத தொகைக்கு வருமான வரித்துறையில் இருந்து தடையில்லா சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அபராதத் தொகையை சசிகலா காசோலை அல்லது வரைவோலை மூலமாக செலுத்த வேண்டும்.

சசிகலா சிறையில் சொகுசு வாழ்க்கையில் ஈடுபட்டார் என அவர் மீது ஊழல் தடுப்பு பிரிவில் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது.

அந்த வழக்கில் விசாரணை முடிந்து குற்றவாளி என தீர்ப்பு வந்தால், அவருக்கு அந்த வழக்கில் கூடுதல் ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. சொத்து குவிப்பு வழக்கில் கைதாகி உள்ளதால் சசிகலா நன்னடத்தை அடிப்படையில் சிறையில் இருந்து முன்கூட்டியே வெளிவர வாய்ப்பு இல்லை. - என்று சிறைத்துறை அதிகாரிகள் கூறினார்கள்.

### நித்தியானந்தாவுக்குச் சார்பான

## அமெ. நீதிமன்றின் தீர்ப்புக்கு பெங்களூரு நீதிமன்றம் தடை

பெங்களூரு,பெப்.06

சுவாமி நித்தியானந்தா தரப்பு ஆர்த்தி ராவ் மீது தொடர்ந்த மான நஷ்ட வழக்கில் அமெரிக்க நீதிமன்றம் வழங்கியிருந்த தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு பெங்களூரு நீதிமன்றம் தற்காலிகத் தடை விதித்துள்ளது.



நித்யானந்தா மீது ஆர்த்தி ராவ் தொடர்ந்த பாலியல் வழக்கு ராம்நகர் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இதேபோல் காப்புரிமை பெற்ற யோகாசன கலைகளை சட்டவிரோதமாக ஆர்த்திராவ் பயன்படுத்துகிறார் எனவும் எனவே அவர் 3 கோடியே 30 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றும் நித்தியானந்தா தரப்பில் அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு ஆர்த்தி ஆஜராகாதமையால், நித்தியானந்தாவுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதை அமல்படுத்தி நஷ்ட ஈடு தொகையை பெற்றுத் தர உத்தரவிடக் கோரி பெங்களூர் நீதிமன்றத்தில் நித்தியானந்தா தரப்பு முறையிட்டது. தீர்ப்புத் தொடர்பாகத் தங்களுக்கு சம்மன் எதுவும் வரவில்லை என ஆர்த்தி தரப்பு வாதிட்டதை அடுத்து தற்காலிக தடை விதிக்கப்பட்டது.

## கொரோனா பீதியால் கேரளாவிலிருந்து சொந்த மாநிலத்துக்குத் திரும்பும் மக்கள்




கேரளாவில் கொரோனா வைரஸால் 3 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அம்மாநிலத்தில் கூலி வேலை செய்த வந்த மேற்குவங்க மாநிலத்தவர்கள் பலர் சொந்த ஊர்களுக்கு திரும்பி செல்கின்றனர்.



கொரோனா வைரஸ் தொற்றால் அப்பிரச்சினையை பேரிடர் பாதிப்பாக அந்த மாநில அரசு அறிவித்துள்ளது.

மற்ற மாநிலங்களைக் காட்டிலும், கூலித் தொழிலாளர்களுக்கு கேரளாவில் அதிக சம்பளம் வழங்கப்படுவதால், மேற்குவங்க மாநிலத்தை சேர்ந்த பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் வாடகைக்கு அறை எடுத்து அங்கு தங்கிப் பணிபுரிந்து வருகின்றனர்.

தற்போது கொரோனா வைரஸ் பாதிப்பு கேரளாவில் ஏற்பட்டுள்ளதை அறிந்த இவர்களது உறவினர்கள், சொந்த ஊர்களுக்கு உடனடியாக வருமாறு அறிவுறுத்துவதால், தங்களது பணிக்கான சம்பளத்தை அவசர, அவசரமாக பெற்றுக் கொண்டு அவர்கள் சொந்த ஊர்களுக்குப் படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikathir



# கொரோனா பீதியால் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பம்; கவனிக்க ஆளின்றி மாற்றுத்திறனாளி சிறுவன் மரணம்

பீஜிங்,பெப்.06

சீனாவில்கொரோனாவைரஸ்நோயால் பலியானவர்களின் எண்ணிக்கை 425 ஐ எட்டியுள்ளது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்து 438 ஆக உயர்ந்துள்ளது. நாளுக்கு நாள் அச்சத்தை ஏற்படுத்தி வரும் இந்த உயிர்க்கொல்லி நோயால் சீனாவில் மேலும் சோக சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கொரோனா வைரஸ் நோய் பரவலின் மையமாக உள்ள ஹூபெய் மாகாணத்தில் இருக்கும் ஹுவாஜியாஹே நகரை சேர்ந்த யாங் செங் (வயது 16) என்ற சிறுவன் சிறுவயதிலேயே மூளைமுடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தான். இதனால் அவன் சக்கர நாற்காலியிலேயே இருந்து வந்தான். அந்தச் சிறுவனுக்குத் தாய் இல்லாதமையால் அவனது தந்தையும், மூத்த சகோதரருமே அவனைக் கவனித்து வந்தனர்.



இந்த நிலையில் கடந்த வாரம் யாங் செங்கின் தந்தைக்கும், சகோதரருக்கும் காய்ச்சல் ஏற்பட்டது. கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் எழுந்ததால் அவர்கள் இருவரும் உள்ளூர் அதிகாரிகளால் கட்டாயமாக தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதனால் யாங் செங்கை கவனிக்க ஆளில்லாமல் போனது. தனது மகன் தனித்து விடப்பட்டிருப்பது குறித்தும், அவனது உடல்நிலை குறித்தும் யாங் செங்கின் தந்தை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு, மகனைக் கவனித்துக்கொள்ளுமாறு உதவி கோரியிருந்தார். தனது மகனுக்கு உதவி கிடைக்கும் என்றும், அவன் நலமாக இருப்பான் என்றும் அவர் நம்பினார்.

இந்த நிலையில் ஒரு வார கால சிகிச்சையில் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட பின் யாங் செங்கின் தந்தை மற்றும் சகோதரர் வீடு திரும்பினர். அங்கு அவர்களுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. சிறுவன் யாங் செங் அவனது சக்கர நாற்காலியில் பிணமாக கிடந்தான்.

கவனிக்க ஆள் இல்லாததால் தனிமையில் வாடிய சிறுவன் உணவு உள்ளிட்டவை கிடைக்காமல் பரிதாபமாக இறந்துள்ளான். இந்த ஒரு வார காலத்தில் சிறுவனுக்கு 2 முறை மட்டுமே உணவு வழங்கப்பட்டதாக உள்ளூர் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சீன கம்யூனிஸ்டு கட்சியின் உள்ளூர் தலைவர் மற்றும் ஹுவாஜியாஹே நகர மேயர் ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

## கனடாவில் குடியேறிய ஹாரி – மேகன் தம்பதிக்கு அரசின் செலவில் பாதுகாப்பா? மக்கள் எதிர்ப்பு!

ஒட்டாவா,பெப்.06

கனடாவில் குடியேறியுள்ள பிரிட்டிஷ் இளவரசர் ஹாரி – மேகன் தம்பதிக்கு அந்த நாட்டு அரசு செலவில் பாதுகாப்பு வழங்குவதற்கு பெரும்பான்மையான மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்து இளவரசர் ஹாரி, கடந்த, 2018 ஆம் ஆண்டு, அமெரிக்க நடிகை



மேகனைத் திருமணம் செய்து கொண்டார். அந்த தம்பதிக்கு, ஆர்ச்சி என்ற 8 மாத ஆண் குழந்தை உள்ளது.

இந்த நிலையில், கடந்த மாதம் அரசு குடும்ப வாழ்க்கையில் இருந்து விலகுகின்றனர் என ஹாரி – மேகன் தம்பதி அறிவித்தனர். இதற்கு ராணி 2 ஆம் எலிசபெத் ஒப்புதல் வழங்கியமையைத் தொடர்ந்து, அவர்கள் இருவரும் கனடா நாட்டின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் குடியேறினர்.

வான்கூவர் தீவின் விக்டோரியா பகுதியில் வசித்து வரும் அவர்களுக்கு, பாதுகாப்பு வழங்க வேண்டிய கட்டாயத்தில் கனடா அரசு உள்ளது. எனினும், அதற்கு ஆகும் செலவை, கனடா அரசு ஏற்குமா, இல்லையா என்பது குறித்து இதுவரை முடிவு செய்யப்படவில்லை.

இந்நிலையில், ஹாரி –மேகன் தம்பதியின் பாதுகாப்பு செலவுகளைக் கனடா அரசு ஏற்க வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்து, மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

இதில், ஹாரி – மேகன் தம்பதிக்கு வழங்கப்படும் பாதுகாப்புக்காப்பால் ஏற்படும் செலவுகளை, கனடா அரசு ஏற்கக்கூடாது என 77 சதவீத மக்கள் தெரிவித்துள்ளனர். வெறும் 19 சதவீத மக்களே பாதுகாப்பு செலவுகளை அரசு ஏற்க சம்மதம் தெரிவித்துள்ளனர்.

## வெட்டுக்கிளிகளால் உணவுப் பேரழிவு!

### எச்சரிக்கின்றது ஐ.நா.

ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் பரவி வரும் வெட்டுக் கிளிகள் படையெடுப்பால் உணவுப் பேரழிவு உண்டாக வாய்ப்பு இருப்பதாக ஐக்கிய நாடுகள்



சபை எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் கடந்த வாரம் திடீரென லோகஸ்ட் வகையைச் சேர்ந்த லட்சக்கணக்கான வெட்டுக்கிளிகள் படையெடுத்து வந்து பயிர்களை நாசம் செய்தன. இதையடுத்து அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் சோமாலியா, கென்யா மற்றும் எத்தியோப்பியா உள்ளிட்ட கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளிலும் தற்போது வெட்டுக்கிளிகள் கூட்டம் கூட்டமாக படையெடுத்துள்ளன. அடுத்தகட்டமாக தெற்கு சூடான், உகாண்டா மற்றும் எரித்திரியா நாடுகளுக்கும் வெட்டுக்கிளிகள் வர வாய்ப்பிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பான FAO தெரிவித்துள்ளது.

வெட்டுக்கிளிகளின் திடீர் படையெடுப்பால் கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பாதிப்பு ஏற்படும் என்று கூறியுள்ள அந்த அமைப்பு இதனால், உணவுப் பொருள் உற்பத்தியில் கடும் பின்னடைவு ஏற்படும் என்றும் எச்சரித்துள்ளது. மேலும் வரும் ஜூன் மாதத்திற்குள் வெட்டுக்கிளிகளின் எண்ணிக்கை 500 மடங்கு வரை அதிகரிக்கும் எனவும் அது தெரிவித்துள்ளது.

இதனிடையே லோகஸ்ட் வெட்டுக்கிளிகளின் படையெடுப்பால் சோமாலியாவிலும் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கு ஆப்பிரிக்க நாடுகள் இணைந்து விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் திட்டத்தை முன்னெடுத்துள்ளன. தானியங்களோடு புற்களையும் வெட்டுக்கிளிகள் கபளீகரம் செய்வதால் வளர்ப்பு கால்நடைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சவுதி அரேபியாவிற்கு படையெடுத்துள்ள லோகஸ்ட்டுகள் அங்கிருந்து ஏமன், ஓமன் நாடுகளுக்கும் பரவி வருகின்றன. கடந்த 2013 ஆம் ஆண்டு எகிப்தில் இருந்து பரவிய வெட்டுக்கிளிகள் ஏற்படுத்திய தாக்கம் பல ஆண்டுகள் நீடித்தது.

தற்போது கடந்த ஆண்டும், நடப்பாண்டும் இந்திய, பாகிஸ்தான் எல்லையில் உள்ள பாலைவனப் பகுதியிலிருந்து வெட்டுக்கிளிகள் பரவி வருகின்றமையால் அப்பகுதியில் ஆய்வு நடத்தி, லோகஸ்ட்டுகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்த ஐ.நா. சபை முடிவு செய்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

## 3,700 பேருடன் சொகுசுக் கப்பல் வைரஸ் பீதியால் ஜப்பானில் தடுப்பு!

டோக்கியோ,பெப்.06

ஜப்பானில் கொரோனா வைரஸ் பீதி காரணமாக 3,700 பேருடன் வந்த சொகுசு கப்பல் நடுக்கடலில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டு உள்ளது.

சீனாவில் ஹூபெய் மாகாணத்தின் தலைநகர் உகானில் தோன்றிய உயிர்க்கொல்லி நோயான கொரோனா வைரஸ் சர்வதேச அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. சீனாவில் இந்த கொடிய வைரஸுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து கொண்டே இருக்கிறது. மேலும் சீனாவுக்கு வெளியிலும் கொரோனா வைரஸ் 2 உயிர்களைப் பறித்துள்ளது. தைவானிலும், ஹொங்கொங்கிலும் தலா ஒருவர் கொரோனா வைரஸுக்குப் பலியாகியுள்ளனர்.

மேலும் இந்தியா உள்பட 26 நாடுகளில் 150 க்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது.



அந்த வகையில் ஜப்பானில் தற்போது வரை 20 பேர் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அவர்கள் ஆஸ்பத்திரிகளில் தனிமைப்படுத்தப்பட்டு, டாக்டர்களின் கண்காணிப்பில் உள்ளனர். இந்த வைரஸ் மேலும் பரவாமல் இருப்பதற்குத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அந்த நாட்டு அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் கடந்த மாதம் 20 ஆம் திகதி (அதாவது கொரோனா வைரஸ் தீவிரமடைவதற்கு முன்பு) ஜப்பானின் 2 ஆவது மிகப்பெரிய நகரமான யோகோஹாமாவில் இருந்து சீனாவில் கட்டுப்பாட்டில் இருக்கும் ஹொங்கொங்குக்கு 'டைமண்ட் பிரின்சஸ்' என்ற சொகுசு கப்பல் சென்றது.

இந்தக் கப்பலில் சுமார் 2,700 பயணிகளும், 1,045 ஊழியர்களும் பயணித்தனர். இந்த கப்பல் கடந்த 25ஆம் திகதி ஹொங்கொங் சென்றடைந்தது. அப்போது கப்பலில் பயணம் செய்த ஹாங்காங்கை சேர்ந்த 80 வயது முதியவர் தரையில் இறங்கினார். ஆனால் பின்னர் அவர் கப்பலுக்குத் திரும்பவில்லை. அதன் பின்னர் அந்த சொகுசு கப்பல் ஹொங்கொங்கில் இருந்து மீண்டும் ஜப்பானுக்குப் புறப்பட்டது. இதற்கிடையில் ஹொங்கொங்கில் கப்பலில் இருந்து இறங்கிய 80 வயது முதியவர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டிருக்கின்றமை கடந்த 30 ஆம் திகதி தெரியவந்தது.

இது குறித்து அவர் பயணம் செய்த 'டைமண்ட் பிரின்சஸ்' சொகுசு கப்பலில் இருக்கும் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்களுக்குக் கடந்த முதலாம் திகதி இந்தத் தகவல் கிடைத்தது. அப்போது இந்தக் கப்பல் ஜப்பானின் ஒகினாவா மாகாணத்தை வந்தடைந்திருந்தது. இதுபற்றி ஜப்பான் அதிகாரிகளுக்கு தெரியவந்ததும் மாகாண தலைநகரான நாகாவில் உள்ள துறைமுகத்துக்கு அருகே அவர்கள் கப்பலைத் தடுத்து நிறுத்தித் தனிமைப்படுத்தினர். எனினும் மருத்துவ பரிசோதனைக்கு பிறகு கப்பலில் இருக்கும் யாருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை, அவர்கள் அனைவரும் தரையில் இறங்கலாம் என அதிகாரிகள் சான்றிதழ் வழங்கினர்.

அதன்பிறகு டைமண்ட் பிரின்சஸ் கப்பல் அங்கிருந்து யோகோஹாமா நகருக்கு புறப்பட்டது. அதனை தொடர்ந்து, நேற்று முன்தினம் மாலை யோகோஹாமா துறைமுகத்துக்கு கப்பல் வந்து சேர்ந்தது. அப்போது கப்பலில் இருந்த 8 பேருக்கு காய்ச்சலுக்கான அறிகுறிகள் இருப்பது தெரியவந்தது. இதனால் அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கலாமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. இதனால் கப்பலில் உள்ள 2,666 பயணிகள் மற்றும் 1,045 ஊழியர்களை தரையில் இறங்குவதற்குத் தடை விதித்த ஜப்பான் அரசு, கப்பலைத் துறைமுகத்தில் இருந்து சில மைல் தொலைவில் நடுக்கடலில் நிறுத்தி தனிமைப்படுத்தி வைத்துள்ளது.

கப்பலில் இருக்கும் 3,711 பேரும் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளனர் என சுகாதாரத்துறை மந்திரி காட்சுனோபு காதோ தெரிவித்துள்ளார். அவர்களின் மருத்துவ அறிக்கை மூலம் அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்படும் வரை அவர்கள் ஜப்பான் மண்ணில் கால்பதிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், இதற்கு 10 நாள்கள் வரை ஆகலாம் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக கடந்த வாரம் இதே போல் இத்தாலி தலைநகர் ரோமுக்கு 7 ஆயிரம் பேருடன் சென்ற சொகுசுக் கப்பல் கொரோனா வைரஸ் பீதி காரணமாக துறைமுகத்துக்குள் நுழையவிடாமல் தடுத்து நிறுத்தப்பட்டது நினைவுகூரத்தக்கது.

# இலங்கை மாதாவே!

## தமிழர்களும் உன் சேய்களா?



ஆசியாக் கண்ட நாடுகளில் முதன் முதலாக ஆண்,பெண் என இருபாலாருக்கும் வாக்குரிமையை வழங்கிய நாடு. ஆசியாவில் முதன் முதலாக வானொலி ஒலிபரப்பை ஆரம்பித்த நாடு. உலகின் முதலாவது பெண் பிரதமரை தெரிவு செய்த நாடு. உலகிலேயே முதன் முதலாக வன விலங்கு சரணாலயத்தை அமைத்த நாடு.

உலகுக்கு உயர்தர தேயிலை மற்றும் உயர்தரமான வாசனைகொண்ட கறுவாவை ஏற்றுமதி செய்த நாடு என பட்டியல் இடும் அளவுக்கு சிறப்புகள்.

பெருமைகள் கொண்ட இந்துசமுத்திரத்தின் முத்துக்கு... மரகதத்தீவுக்கு... புராதன பாரசீக வணிகர்கள் விளித்த செரண்டிப்புக்கு.. லத்தீன் மொழியூடாக ஐரோப்பியர்களால் அடையாளம் காணப்பட்ட சீலான், செய்லான், சிலோன் ஆகிய விளிப்புகள் கொண்ட அந்த அழகிய தீவுக்கு பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர தினமாம்.

பொதுவாகவே ஒரு நாட்டின் சுதந்திரதினம் அதன் ஒட்டுமொத்தக் குடி மக்களுக்கும் எவ்வளவு சிறப்பு.



அந்த வகையில் இலங்கைத்தீவின் குடிமக்கள் அனைவருக்கும் இது உவப்புக்குரிய நாளாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால் கடந்த 72 வருடங்களாக ஒவ்வொரு முறையும் பெப்ரவரி 4 என்ற இந்த அடையாளம் வரும்போது அதேதீவில் வாழும் இன்னொரு தேசிய இனத்திற்கு மட்டும் இந்தநாள் உவப்பான நாளாக இருந்ததேயில்லை.

இன்றைய 72ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக வாயிலில் கட்டப்பட்டிருந்த கறுப்புகொடிகளும் பதாகைகளும் பல்கலைக்கழக பாதுகாப்பு அதிகாரிகளால் அவவரஅவசரமாக அகற்றப்பட்டிருந்தாலும் கூட அன்றும் இன்றும் இந்தக் கரிநாள் கருத்தியல் இருக்கத்தான் செய்கிறது.

2020 சுதந்திரதினத்தை முன்னிட்டு தமிழ் அரசியல் வாதிகள் மதில் மேல் பூனைகளாக இருந்தாலும் சுதந்திர தினத்தை கரிநாளாக கடைப்பிடிக்கும்படி கோரிக்கைவிடுத்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், இந்த நாளில் போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

மறுபுறத்தே அந்ததீவில் அதிகளவுகுடிப்பரம்பலைக் கொண்ட சிங்களமக்களுக்கு அன்றும் இன்றும் இந்ததினம் குறித்த பூரிப்பு இருக்கத்தான் செய்கிறது.

71 ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திர இலங்கை சார்பாக சிறிலங்காவின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா தனது உரையை அன்றைய இலங்கை வானொலியில வழங்கியிருந்தார்.

இதனைக்கேட்டு அன்று பூரித்த சிங்கள மஹாஜனதாவுக்கும் இன்று சிறிலங்காவின் சுதந்திரசதுக்கத்தில் அதன் முதன்மைத்தலையாரியான கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய சுதந்திரதின உரையை கேட்ட சிங்கள மஹா ஜனதா மனங்களிலும் ஒரு பூரிப்பு இருந்திருக்கத்தான் கூடும்.

இவ்வாறான பூரிப்பின் பின்னணியில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வழமையான அணிவகுப்பு டமாரங்களுடன் 72ஆவது சுதந்திரதினம் கடந்தது.

'ரேமினேற்றர்' தனக்குரிய தனித்துவ சுதந்திரதின நிகழ்வுகளால் கொழும்பின் இயல்புநிலை அதிகம் பாதிப்படையாத வகையில் நகர்த்தியமையையும் அவதானிக்க முடிந்தது.

100 மாணவர்கள் வரிசைகட்டி தேசிய கீதத்தை பாடினாலும் எதிர்பார்க்கப்பட்டதைப்போல தேசிய நிகழ்வில் தமிழ் தேசிய கீதத்துக்கு இடமளிக்கப்படவில்லை.

எது, எப்படியோ அன்றைய டி. எஸ். முதல் இன்று சிறிலங்காவின் எட்டாவது தலையாரியாக பங்கேற்ற 'ரேமினேற்றர்' கோட்டாபயராஜபக்ஷ வரை தமிழர்கள் கண்டுகொண்ட சிறிலங்காவின் 13 ஆட்சிக்கொலுத் தலையாரிகளின் தடங்களில் என்னமாற்றம் இருக்கக்கூடும்? ஒரு வேளை தமிழ் மக்களின் மனங்களை வென்ற ஒரு யுகப்புரட்சி அந்ததீவில் இடம்பெற்றிருந்தால் இன்று சுதந்திர இலங்கை என்ற பெப்ரவரி4 அடையாளத்தை தமிழர்களும் உவப்புடன் கொண்டாடியிருக்ககூடும்.

ஆனால் மறுபுறத்தே அந்தத்தீவை ஆட்சிசெய்யும் கொழும்பு அதிகாரமையத்திடமிருந்து ஆச்சல் ஆச்சலாக பல இனச்சங்காரங்களையும், பல துரோகங்களையும், ஒப்பந்தங்கள் அல்லது உடன்பாடுகளின் கிழித்தெறிப்புக்களையும் கண்ட இனமாக தமிழினம் இருந்தது.

இந்த எதிர்வினையின் அடிப்படையில் தனிநாடு கோருவதற்காக ஒரு பெரும் உதிரம் சிந்திய தியாகப்போராட்டத்தை நடத்தி சமகாலத்தில் தமிழ்அரசியல்வாதிகளால் கையறு நிலைக்கு தள்ளப்பட்ட இனமாகவும் தமிழினம் மாறியுள்ளது.

கொழும்பு அதிகாரமையத்தின் அதிகாரங்களையும் பௌத்த புனிதங்களையும் கடுமையாக எதிர்வினைக்குள்ளாக்கிய அதே இனத்தில் இன்று தேர்தல் ஆதாயத்துக்கு அறிக்கை விடக் கூடிய தமிழ்அரசியல்வாதிகள் மட்டுமே எஞ்சியுள்ளமையும் இன்னொரு விடயம்

எது,எப்படியோ இன்று சிறிலங்காவின் சுதந்திர தினத்தில் தனது உரையை வழங்கிய 'ரேமினேற்றர்' கோட்டாபாய ராஜபக்ஷ, தனது அரசாங்கம் எப்பொழுதும் எதிர் அபிப்பிராயங்களைப் பொறுமையுடன்



செவிமடுக்கத் தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் வழமைபோலவே இலங்கைத்தீவில் எந்த விதத் தீவிரவாத அமைப்புக்கோ அல்லது அடிப்படைவாதத்துக்கோ இடமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனையும் விட இலங்கை ஒற்றையாட்சியுடைய அரசு எனக்கூறிய 'ரேமினேற்றர்' மேலும் தனக்குரிய தனித்துவமான முறையில் சில விடயங்களையும் சொல்லியிருந்தார்.

ஆனால் சிறிலங்காவின் சுதந்திர தினம் உண்மையில் இலங்கைத்தீவுக்கு உயரிய சமூகப்பெறுமானம் கொண்ட ஒரு நிகழ்வாக இருந்தால் இன்றைய சுதந்திர தினத்தை இலங்கையர்கள் என்ற அடையாளத்தில் உண்மையில் ஏன் தமிழ்மக்கள் கொண்டாடவில்லை?

72 ஆண்டுகால சுதந்திரம் என்ற அடையாளம் தமிழ் மக்களுக்கு வழங்கியது என்ன? இந்த வினாக்களுக்கும் கொழும்பு அதிகார மையம் மேற்பார்த்த தென்னிலங்கைதான் விடை தரவேண்டும்.

ஆக மொத்தம் 72 ஆண்டுகால சுதந்திரத்தை கொழும்பில் பெருவிழாவாக நடத்திய தென்பகுதிக்கு அதன் தரப்பில் ஒரு நியாயம் இருக்கக்கூடும்.

அதேபோல இதே 72 ஆண்டுகால சுதந்திரம் எமக்கு என்ன வழங்கியது என்ற வினாவின் பின்னால் உள்ள நியாயத்துடன் துக்கித்துக்கொள்ளும் தமிழர் தரப்பிலும் ஒரு தார்மீக நியாயம் இருக்கத்தானே வேண்டும்.

நன்றி :- ஐபிஸி தமிழ்
பிரேம்



## தமிழர்களைப் புறக்கணிக்கும் நடவடிக்கையில் கோட்டா அரசு

### மனித உரிமை செயற்பாட்டாளர்கள் விசனம்

கொழும்பு, பெப். 06

சுதந்திர தின நிகழ்வில், தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படாமை தமிழர்களைப் புறக்கணிக்கும் நடவடிக்கை என்று இலங்கை மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வரலாற்று ரீதியாகச் சிங்களம் மாத்திரம் போதும் என்ற கொள்கை எமது நாட்டை எவ்வாறு அழித்திருந்தது என்பதை கடந்த காலத்தில் உணர்ந்திருந்தும் அந்தத் தவறை மீண்டும் செய்துவிடக்கூடாது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதம் பாடப்படுவதை எதிர்த்து நேற்று முன் தினம் பொரளை சுற்றுவட்டத்தில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தேசிய கீதத்தை இசைக்கும் வகையில் இலங்கை மனித உரிமைகள் செயற்பட்டாளர்கள் ஒன்றுகூடினர்.

இரு மொழிகளிலும் தேசிய கீதத்தை இசைத்த பின்னர், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சுவஸ்திகா அருள்லிங்கம் கூறுகையில் –

இந்த நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் அவர்கள் புரிந்துகொள்ளும் மொழியில் தேசிய கீதம் பாட உரிமையுண்டு. சிங்கள மற்றும் தமிழ் இரண்டுமே இலங்கையின் உத்தியோகபூர்வ மொழிகளாக இருப்பதை அங்கீகரிக்கவேண்டும்.

இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்கள் எதிர் கொள்ளும் குறைகள் எந்த வகையிலும் மொழி பிரச்சினைக்குள் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதை முழுமையாக ஒப்புக்கொள்கிறோம்.

எவ்வாறாயினும் சிங்கள மொழி பேசாத மக்களை பாகுபாடு காட்டும் அல்லது புறக்கணிக்கும் அரசின் எந்தவொரு நடவடிக்கையையும் நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

வரலாற்று ரீதியாக சிங்களம் மாத்திரம் போதும் என்ற கொள்கை எமது நாட்டை எவ்வாறு அளித்திருந்தது என்பதை கடந்த காலம் உணர்ந்திருந்தோம். இதுபோன்ற ஒரு வரலாறு மீண்டும் வரவில்லை என்பதை உறுதிப்படுத்த ஒன்றிணைவோம் – என்றார். (ஐ)

# விமல் வீரவன்ஸ மன நோயாளி!

### சிறிதரன் எம்.பி. காட்டம்



கொழும்பு, பெப். 06

அமைச்சர் விமல் வீரவன்ஸ ஒரு நவீன மனநோயாளி எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கட்டைக்காடு கேவில் பகுதி மக்களுடனான சந்திப்பு நேற்று முன் தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட மக்கள், விமல் வீரவன்ஸவின் காணாமல் ஆக்கப்பட்டவர்களை மண்ணுக்குள் தோண்டி தேடுங்கள் என்ற கருத்துக்குக் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர். இந்த அரசுதங்கள் உறவுகளைப் புதைத்த இடத்தைக் காட்ட வேண்டும் எனவும் அவர்கள் கோரினர்.

அதன் பின்னர் கருத்து தெரிவித்த சிறிதரன், இந்த நாட்டின் ஜனாதிபதி தொடக்கம் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் அனைவரும் தமிழர்களைக் கொடூர வெறியுடனே பார்க்கின்றனர். தமிழர்களின் இரத்தங்களைக் குடிக்க காத்துக்கொண்டிருப்பது போன்று அவர்களின் செயற்பாடுகள் அமைகின்றன. வீமல் வீரவன்ஸ ஒரு நவீன மனநோயாளி. இந்த அரசு தமிழர்களை அடக்கி ஆளவும் ஒடுக்கி ஆளவும் தொடர்ந்து முயற்சிக்கிறது.

சிங்களத் தலைவர்கள் கடந்த கால படிப்பினைகளில் இருந்தும் பாடங்களைக் கற்றுக்கொள்ள வில்லை. எமது உரிமைகளைத் தர மறுத்தபோதுதான் தமிழர்கள் போராடினார்கள் – என்றார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினருடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன், உபதவிசாளர் கயன், பிரதேசசபை உறுப்பினர்களான றமேஸ், வீரவாகுதேவர், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதி ஞானம், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## காணாமல் போயுள்ள 2 பிள்ளைகளின் தாய்!

வவுனியா, பெப். 06

இரண்டு பிள்ளைகளின் தாயைக் காணவில்லை என வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 47வயதுடைய இரு பிள்ளைகளின் தாயான மகேஸ்வரி செந்தில் செல்வன் என்பவரையே காணவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் வசித்து வரும் இந்தப் பெண் கடந்த 29.01.2020 அன்று காலை 8.30 மணியளவில் வவுனியா நகருக்குச் செல்வதாகத் தெரிவித்து சென்றுள்ளார். அதன் பின்னர் முற்பகல் 10.30 மணியளவில் அவருக்குக் கணவர் தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்திய சமயத்தில் அவரின் தொலைபேசி செயலிழந்து இருந்துள்ளது. அதன் பின்னர் அன்றையதினம் மாலை வரை அவரை பல இடங்களில் தேடியும் காணவில்லை. (ஐ)

## ஹேமசிறிக்கு பிணை

கொழும்பு, பெப். 06

முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோவைப் பிணையில் விடுக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்ணாண்டோ, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போதே இந்த பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஈஸ்டர் தாக்குல்களைத் தடுப்பதற்குத் தவறினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டு முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டா கைது செய்யப்பட்டு விளக்கமறியில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பூஜித் ஜயசுந்தர தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழில் தேசிய கீதம் பாடினால் சுதந்திரம் கிடைத்து விடுமா?

### சிவசக்தி ஆனந்தனின் கேள்வி இது



வவுனியா, பெப். 06

தமிழில் தேசிய கீதத்தைப் பாடினால் மட்டும், எங்களுக்கான சுதந்திரம் கிடைத்து விடுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசிய கீதம் தமிழில் பாடப்படத்தான் வேண்டும். ஆனால் இந்த நாடு சுதந்திரமடைந்து 72 வருடங்களாயிற்று. ஆனால் தமிழ் பேசும் மக்களாகிய எங்களுக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை.

72 வருடங்களாகச் சுதந்திரம் கிடைக்காத எங்களுக்கு, தமிழில் தேசியக் கீதம் பாடுவதால் மட்டும் சுதந்திரம் கிடைத்துவிடாது. தமிழில் பாடுவதால் சுதந்திர தினத்தை நாங்கள் விரும்பிக் கொண்டாடுகிறோம் என்றும் ஆகிவிடாது.

தேசிய கீதம் தமிழிலும் பாடப்பட வேண்டும் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், எமக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லையே. சுதந்திரம் கிடைக்காத எமக்கு, தேசியக் கீதத்தைத் தமிழில் பாடினால் என்ன? சிங்களத்தில் பாடினால் என்ன?

அல்லது தமிழில் தேசியக் கீதத்தைப் பாடினால் மட்டும், எங்களுக்கான சுதந்திரம் கிடைத்து விடுமா?

எமக்கு ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. சிங்களப் பெரும்பான்மை மக்கள் மத்தியில் இனவாதத்தைப் பரப்பி தங்கள் பலத்தை அதிகரித்துக் கொள்வதற்காக, தமிழ் மொழியை தவிர்க்கும் இவ்வாறான செயற்பாடுகளை சிங்கள அரசியல்வாதிகள் மேற்கொள்கின்றனர். அதேபோன்று, தமிழ் அரசியல்வாதிகளுக்கும் இந்த விடயம் தீனி போட்டுள்ளது. கடந்த அரசைப் பாதுகாப்பு, அதற்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்த தமிழ் அரசியல்வாதிகள், எல்லாவற்றையும் கோட்டை விட்ட நிலையில், இப்போது தமிழில் தேசியக் கீதம் பாடவில்லை என்பதை ஒரு பிரச்சினையாக உயர்த்திப் பிடிக்கின்றனர்.

தமிழ் அரசியல்வாதிகள் –சரியான நேரத்தில் தவறான முடிவுகளை எடுத்து விட்டு, இப்போது தமிழ் மக்களுக்கு இது மட்டும்தான் பிரச்சினை என்பது போல் காட்டிக் கொண்டிருக்கின்றனர் – என்றார். (ஐ)

# மத்தும பண்டார விடயத்தில் மீண்டும் சர்ச்சை உருவாகும்?



கொழும்பு, பெப். 06

ஐ.தே.க தலைமையில் உருவாக்கப் படவிருக்கும் பரந்த அரசியல் கூட்டணியின் பொதுச் செயலராக ரஞ்சித் மத்தும பண்டாராவை சஜித் பிரேமதாஸ பரிந்துரைத்துள்ளார். எனினும், இந்த விவகாரத்தில் கட்சிக்குள் மீண்டும் சர்ச்சையேற்படும் எனத் தெரிகிறது.

கட்சியின் செயற்குழு இன்று கூடும் போதே இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அறியப்படுகிறது.

ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட ஆறு பேரைப் பொதுச் செயலர் பதவிக்குப் பரிந்துரைக்கவேண்டாமென ரணில் தெரிவித்த பின்னரே, சஜித் இந்தப் பரிந்துரையை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு இன்று மீண்டும் கூடும். அதற்கு முன்னர், கட்சியின் தலைவர்கள் கூடி என்ன விவாதிக்க வேண்டும் என்று முடிவு செய்வார்கள் என்று பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவாசம் தெரிவித்தார்.

ரஞ்சித் மத்தும பண்டாராவை கூட்டணிப் பொதுச் செயலராக நியமிக்கச் செயற்குழு ஒப்புக் கொள்ளாவிட்டால், அது சிக்கலாக இருக்கும் என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# பாகிஸ்தானை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியுள்ளது இந்திய அணி



தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இளையோர் உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதியில் பாகிஸ்தான் அணியை 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி, இந்திய அணி இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளது.

19 வயதிற்கு உட்பட்டோருக்கான ஒரு நாள் உலகக் கிண்ணத் தொடர் தென்னா பிரிக்காவில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற முதல் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. அதன்படி களமிறங்கிய அவ்வணி இந்தியாவின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 172 ஓட்டங்களில் சுருண்டது.

பின்னர் 173 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா களம் இறங் கியது. ஜெய்ஸ்வால், சக்சேனா ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். இரு வரும் சிறப்பாக விளையாடினர். இரு வரது விக்கெட்டையும் வீழ்த்த பாகிஸ்தான் வீரர்கள் கடுமையாக முயன்றும் பலன் அளிக்கவில்லை.

ஜெய்ஸ்வால், சக்சேனா நிதானமாக விளையாடி அரைசதம் அடித்தனர். அரை சதம் அடித்த பின் ஜெய்ஸ்வால் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 36 ஆவது ஓவரின் 2 ஆவது பந்தை சிக்சருக்கு தூக்கி சதம் அடித்ததுடன் அணியை வெற்றி பெற வைத்தார்.

இந்தியா விக்கெட் இழப்பின்றி 35.2 ஓவர்களில் 176 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஜெய்ஸ்வால் 105 ஓட்டங்களுடனும், சக்சேனா 59 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

# இலங்கை அணியை எதிர்கொள்ளும் மேற்கிந்தியத் தீவு அணி அறிவிப்பு!

இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் விளையாடும், எதிர்பார்ப்பு மிக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிரன் பொலார்ட் தலைமையிலான 15பேர் கொண்ட அணியில், அனுபவ ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான டரன் பிராவோ ஆறு மாதங்களின் பின்னர் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதேபோல, துடுப்பாட்ட சகலதுறை வீரர் ரொவ்மன் பவல் மீண்டும் அணியில் இணைந்துள்ளார்.

கடந்த வருடம் மேற்கிந்திய தீவுகள் மண்ணில் நடைபெற்ற இந்திய அணியுடனான போட்டியில், முழங்கால் உபாதைக்குள்ளான 24 வயதுடைய இளம் சுழல் பந்துவீச்சு சகலதுறை வீரர் பெபியன் அலன் உபாதையிலிருந்து மீண்டுள்ள நிலையில், அவர் மீண்டும் அணியில் இணைந்துள்ளார்.

கடந்த வருட இறுதியில் இந்திய சுற்றுப்பயணத்தின்போது அதிரடித் துடுப்பாட்டத்தை வெளிக்காட்டிய 23 வயதுடைய மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் சிம்ரொன் ஹெட்மெயர் இறுதியாக அயர்லாந்து அணியுடன் நடைபெற்ற ஒருநாள் மற்றும் ரி - 20 சர்வதேச தொடரில் அதிக போட்டிகளில் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஏமாற்றமளித்தார்.

இதன் காரணமாக இலங்கை அணியுடன் நடைபெறவுள்ள ஒருநாள் தொடருக்கான அணியிலிருந்து அவர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இறுதியாக நடைபெற்ற அயர்லாந்து அணியுடனான தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெற்றிக்குத் துடுப்பாட்டத்தில் முக்கிய பங்குவகித்த ஆரம்ப துடுப்பாட்ட வீரர் எவின் லுவிஸ் இலங்கை அணியுடன் தொடரில் இடம்பெறும் வாய்ப்பை இழந்துள்ளார்.

அவர் குறித்து இலங்கை அணியுடனான தொடருக்கான அணி தெரிவுக்காக உடற்தகுதிப் பரிசோதனையில் தோல்வியடைந்ததன் காரணமாகவே ஒருநாள் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என மேற்கிந்திய கிரிக்கெட் சபையின் அணி தேர்வுக்குழுத் தலைவர் ரோஜர் ஹார்ப்பர் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த வருடம் சர்வதேச கிரிக்கெட் அறிமுகம் பெற்ற துடுப்பாட்ட வீரர் ப்ரெண்டன் கிங், வேகப்பந்துவீச்சாளர் ரொமாரியோ ஷெப்பர்ட் ஆகியோர் தொடர்ந்தும் ஒருநாள் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

கிரன் பொலார்ட் தலைமையிலான அணியில், பெபியன் அலென், சுனில் எம்ரிஸ், டரன் பிராவோ, ரோஸ்டன் சேஸ், செல்டோன் கொட்ரெல், ஜேஸன்



ஹோல்டர், சாய் ஹோப், அல்சார்ரி ஜோசப், பிரெண்டன் கிங், கீமோ போல், நிக்கோலஸ் பூரான், ரொவ்மன் பவல், ரொமாரியோ செப்பர்ட், ஹெய்டன்வோலஷ்ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு தரப்பு தொடரில் விளையாடுவதற்காக இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 2 போட்டிகள் கொண்ட ரி - 20 சர்வதேச ஆகிய இரு தொடர்களில் இலங்கை கிரிக்கெட் அணி விளையாடவுள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி, எதிர்வரும் 22ஆம் திகதி கொழும்பு - எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## மீண்டும் வந்தார் மக்ஸ்வெல்

தென்னாபிரிக்கா அணிக்கெதிரான ஒருநாள் மற்றும் ரி -20 தொடரில் விளையாடும், ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கடந்த வருடம் கிரிக்கெட்டிலிருந்து இடைக்கால ஓய்வினை பெற்றிருந்த சகலதுறை வீரர் கிளென் மக்ஸ்வெல் மீண்டும் அணியில் இணைந்துள்ளார்.

இதனால் கிளென் மக்ஸ்வெலுக்கு மாற்று வீரராக களமிறங்கிய அஸ்டன் டர்னர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இதுதவிர விக்கெட் காப்பாளர் மத்தியூ வேட் மற்றும் சகலதுறை வீரரான மிட்செல் மார்ஷ் ஆகியோர் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ஆர்ஸி ேரார்ட் மற்றும் பீட்டர் ஹேண்ட்ஸ்கொம்ப் ஆகியோருக்கு பதிலாக, இவர்கள் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

சீன் அபோட் மற்றும் ஜெய் ரிச்சர்ட்சன் ஆகியோரும் ரி -20 அணியில் இணைந்துள்ளனர்.

ஆரோன் பின்ஞ் தலைமையிலான அணியில், அஸ்டன் அகர், அலெக்ஸ் கெர்ரி, பெட் கம்மின்ஸ், ஜோஷ் ஹசில்வுட், மார்னஸ் லபுஸ்சகன், மிட்செல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், கேன் ரிச்சட்சன், ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டாக், மெத்தியு வேட், டேவிட் வோர்னர், ஆடம் செம்பா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ரி -20 அணி

ஆரோன் பின்ஞ் தலைமையிலான அணியில், சீன் அபோட், அஸ்டன் அகர், அலெக்ஸ் கெர்ரி, பெட் கம்மின்ஸ், மிட்செல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், ஜெய் ரிச்சட்சன், கேன் ரிச்சட்சன், ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டாக், மத்தியூ வேட், டேவிட் வோர்னர், ஆடம் செம்பா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த மாத இறுதியில் தென்னாபிரிக்காவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் ஆஸ்திரேலியா அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர்களில் விளையாடுகின்றது.

இதில் முதலாவதாக மூன்று போட்டிகள் கொண்ட ரி -20 தொடர் நடைபெறுகின்றது. இதன் முதல் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி ஜோகன்னர்ஸ்பெர்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# இங்கிலாந்தை வீழ்த்தியது தென்னாபிரிக்கா

சுற்றுலா இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையே கேப் டவுனில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற முதல் ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி அங்கு 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும், 3 போட்டிகள் கொண்ட ரி -20 தொடரிலும் விளையாடி வருகின்றது.

இதில், முதலாவதாக இடம்பெற்ற டெஸ்ட் தொடரில் 3 - 1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று தென்னாபிரிக்க அணியை மண் கவ்வ வைத்தது.

இந்நிலையில், புதிய தலைவரான குயின்டன் டி கொக் தலைமையில் தென்னாபிரிக்கா நேற்று முதலாவது ஒருநாள் போட்டியை எதிர்கொண்டது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் துடுப்பாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணி சீரான இடைவெளிகளில் விக்கெட்டுக்களை இழந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 258 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அதிகபட்சமாக நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர் ஜோ டென்லி 87 ஓட்டங்களையும், கிறிஸ் வோக்ஸ் 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

தென்னாபிரிக்க பந்துவீச்சில், ம்ஸி 3 விக்கெட்டுக்களையும், ஹென்ரிக்ஸ், ஸ்முட்ஸ், பெஹ்லுக்வாயோ, சிபாம்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

259 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் தொடக்க ஓட்டக்காரர்களில் ஒருவரான ரீஸா ஹென்ரிக்ஸ் 6 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களம் நுழைந்த டெம்பா பவுமா அணித் தலைவர் குயின்டன் டி கொக்குடன் இணைந்து அணியை வெற்றிப் பாதை நோக்கி நகர்த்தினார்.

சர்வதேச ஒருநாள் அரங்கில் தனது 15 ஆவது சதத்தைப்பூர்த்தி செய்த குயின்டன் டி கொக், 107 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த பவுமாவும் இரண்டு ஓட்டங்களால் சதத்தைத் தவற விட்டார்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 47.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. போட்டியின் நாயகனாக குயின்டன் டி கொக் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றி மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் தென்னாபிரிக்கா 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி டேர்பன் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.



## சம்பந்தனுக்கு மஹிந்த பிறந்த நாள் வாழ்த்து!

கொழும்பு, பெப். 06
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் நேற்று தனது 87 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார்.

நேற்றுக் காலை அவரைத் தொலைபேசியில் அழைத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அரசியலில் பல கருத்து வேறுபாடு இருக்கலாம். நீங்கள் மூத்த தமிழ்த் தலைவர். நீங்கள் ஆரோக்கியமாகத் தொடர்ந்து பணிபுரிய வாழ்த்துகிறேன் என்று மஹிந்த சம்பந்தனை வாழ்த்தினார் என அறியமுடிந்தது. (ஐ)

## விரைவில் வருகிறது 5 ஜி!

கொழும்பு, பெப். 06
இலங்கையில் 5ஜி தொழில்நுட்பத்தை விரைவில் அறிமுகப்படுத்த தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் தயாராகி வருகின்றது.

இதற்கான சோதனை நடவடிக்கைகள் தற்போது வரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இயங்கும் அனைத்து தொலைத்தொடர்பு நிறுவனங்களும் இந்த சோதனை நடவடிக்கைகளை நடத்தி வருவதாக ஆணையம் கூறுகிறது.

இலங்கையில் டிஜிற்றல் தொழில்நுட்பம் கொண்ட வீதித் திட்டம் ஒன்றை தயாரிப்பதே இதன் நோக்கமாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 5ஜி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி வைப்பதாகக் குறிப்பிட்ட தற்கமைய இந்த நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# சஜித் கூட்டணியின் செயலாளர் ரஞ்சித்!

## நேற்றைய கூட்டத்தில் இணக்கம்



கொழும்பு, பெப். 06
சஜித் பிரேமதாஸ தலைமையிலான புதிய கூட்டணியின் செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவை நியமிக்க ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுப் புதன்கிழமை இணக்கம் தெரிவித்துள்ளது.

புதிய முன்னணியின் தலைவர், பிரதமர் வேட்பாளர் உள்ளிட்ட பொறுப்புக்களுக்கு மேலதிகமாக பொதுச் செயலாளரை நியமிப்பது, ஒழுக்காற்று செயற்பாடுகள், வேட்புமனுக் குழுவின் பூர்வாங்க செயற்பாடுகளைக் கையாள்வது உட்பட அனைத்து அதிகாரங்களையும் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்குவதற்கு கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் உருவாகும் புதிய கூட்டணியின் செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நியமித்திருந்தார்.

இந்நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று இதற்கு இணக்கம் தெரிவித்திருந்தபோதும் இன்று இடம்பெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவிலும் இணக்கம் தெரிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பெண் ஒருவரின் சடலம் குளத்தில் இருந்து மீட்பு

கொழும்பு, பெப். 06
பண்டாரகம, பொல்கொட குளத்தில் மிதந்து கொண்டிருந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 3 ஆம் திகதி இரவு காணாமற்போனார் எனத் தெரிவிக்கப்படும் பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பண்டாரகம, அளுத்கம பகுதியை சேர்ந்த 70 வயதுடைய கருணாவதி எனும் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பண்டாரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## காங்கேசன்துறைக் கடலில் 157 கிலோ கஞ்சா சிக்கியது!




யாழ்ப்பாணம், பெப். 06
காங்கேசன்துறை கடற்பிராந்தியத்தில் சுமார் 157 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை கடற்பிராந்தியத்தின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் கடற்படையினரால் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது, கடற்கரைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 43 கிலோ 400 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் பகுதியை அண்மித்த 3 இடங்களில் மேற்கொண்ட சோதனையின்போது 113 கிலோ 700 கிராம் கேரளக் கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ஐ)



## நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார் ரத்னபிரிய!

கொழும்பு, பெப். 06
ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக சிவில் சமூக ஆர்வலர் சமன் ரத்னபிரிய பதவியேற்றுள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று புதன்கிழமை ஆரம்பமான நாடாளுமன்ற அமர்வின் போதே சமன் ரத்னபிரிய நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்னவின் இராஜினாமாவை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்ட இடம்




கொழும்பு, பெப். 06
ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு வசதியாக 'ஆர்ப்பாட்ட இடம்' பெயர்ப் பலகை நாட்டப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட புதிய இடம் குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் இல்லை. ஆனால் நேற்று அந்தப் பகுதியால் பயணித்தவர்களுக்குப் பெயர்ப் பலகை காட்சியளித்தது.

அண்மையில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்வேறு தரப்பினரை ஜனாதிபதி செயலக அதிகாரிகள் சந்தித்து அவர்களது கோரிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு மார்ச் மாதம் முதல் 1,000 ரூபா

## சபையில் பிரதமர் மஹிந்த அறிவிப்பு



கொழும்பு, பெப். 06
மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்த வேதனம் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில் தெரிவித்தார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு தோட்ட தொழிலாளர்களுக்கான நாளாந்த வேதனம் 1000 ரூபா மார்ச் மாதம் முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கு கம்பனிகள் தயாராக உள்ளமையால் அவற்றை அரசுடைமையாக்கும் தேவை தற்போது இல்லை என்று பிரதமர் குறிப்பிட்டார். (ஐ)

# கொரோனா தொற்று சந்தேகத்தில் பெண்ணுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை!

யாழ்ப்பாணம், பெப். 06
கோரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று புதன்கிழமை சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

கோரோனா வைரஸ் தொற்றுக்கான பெரியளவு நோய்த் தாக்கங்கள் இல்லை. அவருக்கு இல்லை. அவருடைய குருதி மாதிரிச் சோதனையின் பின்னரே அவருக்கு ஏற்பட்டுள்ள வைரஸ் தொற்று தொடர்பில் தெரிவிக்க முடியும் என யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி. ஜமுனாநந்தா தெரிவித்தார்.

அத்துடன் இது தொடர்பில் மக்கள் பீதியடைய தேவையில்லை. அந்தச் சந்தேகத்தின் அடிப்படையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனினும் இது தொடர்பில் நாங்கள் அவருக்கு முழுமையான சிகிச்சை அளித்து வருகின்றோம்.

அந்தப் பெண் தனிமைப்படுத்தப்பட்ட விடுதி ஒன்றில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ)

# படகு கவிழ்ந்து விபத்து





மட்டக்களப்பு, பெப். 06

மட்டக்களப்பு முகத்துவாரத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. எனினும் இந்த விபத்தில் உயிர் ஆபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை.

மட்டக்களப்பு பாலமீன்மடு பகுதியில் இருந்து மூன்று மீனவர்கள் நேற்றுக் காலை முகத்துவாரம் கடல் பகுதியில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

இதன்போது பாரிய கடல் அலையில் சிக்கி மீன்பிடிப் படகு கவிழ்ந்த நிலையில், மூன்று மீனவர்களும் கடலில் வீழ்ந்துள்ளனர்.

கவிழ்ந்த படகைப் பிடித்துக் கொண்டு மீனவர்கள் சத்தமிட்டதைத் தொடர்ந்து, அப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த ஏனைய மீனவர்கள் விரைந்து வந்து மீனவர்களைக் காப்பாற்றியுள்ளனர்.

மீனவர்கள் விரைந்து வந்து உதவியதன் காரணமாக கடலில் மூழ்கிய மூன்று மீனவர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டதுடன், கடலில் மூழ்கிய படகும் மீட்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்
இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், துபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.
எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.
THE SASIKA LEARNERS
முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.
வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)
சசிகா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
DS NO - 882
தலைமைக் காரியாலயம். இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.
கிளை நிறுவனங்கள்:
வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012
காரைநகர்
021 225 2454,
070 510 2484
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014
பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135
சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016
யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக
0212215472
0703013012
பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.02.2020 இல் வெளியிடப்பெற்றது.